# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஜனவரி 2005 ஜீவியம் 10 மலர் 9**

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம் பக்கம்

| | |
|---|---|
| *இம்மாதச் செய்தி* | 2 |
| *எங்கள் குடும்பம்* II | 3 |
| *சாவித்ரி* | 39 |
| *லைப் டிவைன்* | 40 |
| *அஜெண்டா* | 44 |
| *அன்பர் கடிதம்* | 46 |
| *லைப் டிவைன் - கருத்து* | 52 |
| *யோக வாழ்க்கை விளக்கம்* V | 54 |
| *ரயில்வே கேட்* | 58 |
| *பிரச்சினை வாய்ப்பாக மாறும்* | 61 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# இம்மாதச் செய்தி

**உன் நினைவே உலகம்**

**உன்னைப் பற்றி நினைப்பது.**



# எங்கள் குடும்பம் II

**எங்கள் குடும்ப வாழ்வில் யோக தத்துவங்கள்:**

முதற்பகுதியில் வாழ்க்கை முறைகளை யோகச் சூழலில் ஓரளவு விளக்கினோம். யோகமும் வாழ்வும் முடிவில் ஒன்றானாலும், முடிவு வரும்வரை அவை பிரிந்திருக்கும். யோகம் என்றும் சிரேஷ்ட புருஷர்கள் (cream of society) அனுஷ்டிப்பது. வாழ்வு மக்களுக்குரியது. இந்தியா ஜகத்குருவாக அதனுடல் பிளவுபட்டது மீண்டும் ஒன்றாகவேண்டும். அதற்குள் மற்றொரு காரியம் முடிந்திருக்க வேண்டும். இந்தியா ஆன்மீக நாடு. ஆன்மீகத்திற்கொத்தவாறு 1000 ஆண்டுகட்குமுன் நாடு வளம் கொழித்தது. அதற்குரிய organisations ஸ்தாபனங்கள் அன்றிருந்தன. அவை இன்றும் பயன்படும் என்றாலும் இன்றைய உலகுக்குரிய மாறுதல்கள் தேவை. ஸ்தாபனங்கள் அழியாவிட்டாலும், அவற்றை ஆண்ட பண்புகள், முக்கியமாக சத்தியம், நேர்மை இன்றில்லை. புது உலகுக்குரிய அளவில் ஸ்தாபன அம்சங்கள் மாறுவதுடன் ஸ்தாபனத்திற்குரிய பண்புகள் நாட்டுப் பண்புகளாக உருவாக வேண்டும். அவை அன்பர்கள் வாழ்வில் எழுதல் தேவை. இக்குடும்பத்தில் அப்பண்புகள் உருவாக வேண்டிய சந்தர்ப்பங்களையும், அவற்றிற்குத் தடையான விஷயங்களையும் இவ்விரண்டாம் பாகத்தில் கருதுவோம்.

சத்தியம் அடிப்படை. அது பலமானது. அது வாழ்வில் மட்டும் காலை ஊன்றியிருக்காது. சத்தியத்தின் அஸ்திவாரமாக இருக்கும் தெம்பு வாழ்வுக்கில்லை. வாழ்வுக்கடிப்படையான ஜடத்திற்கும், அதன் பிரதிநிதியான உடலுக்கும் உண்டு. உடல் இருள்மயமானதால், உடலுக்கும் அவ்வலிமையில்லை. எந்த ஜோதி இருளாயிற்றோ அந்த ஒளிக்கு அத்திறனுண்டு.

✡ **நம் செயல்கள், சத்தியமானசொற்கள், உடலுள் உள்ள - இருளில் மறைந்துள்ள - ஜோதியை வெளிப்படுத்துமாறு அமைய வேண்டும்.**

✡ **இக்குடும்ப வாய்ப்புகள் அச்சத்தியத்தால் பலிப்பதும், அதன் எதிரான செயலால் கெடுவதும் நம் ஆராய்ச்சிக்குரியது.**

✡ **புறத்தின் வாய்ப்புகளைவிட அகத்தின் மனநிலைகள் நமக்குரியன.**

✡ **தாயார் அதிர்ஷ்டத்தை நாடுவதை மாற்றி அருளை நாட வேண்டும்.**

✡ **குடும்பத்தினர் இருளை நோக்கிப் போவதற்குப் பதிலாக அருளை நோக்கிச் செல்லும் இலட்சியத்தை ஏற்க வேண்டும்.**

✡ **எந்த ஒரு செயலிலும், அருளின் நோக்கில் இவ்வெளிப்பாடுகளை எடுத்துக்கூறினால், அதே முயற்சியை மேற்கொள்ளும் அன்பர்கள் மனத்தில் அவை அன்னையின் சுவடுகளாக அமையும்.**

✡ **எந்தச் செயலையும் செயலாகவோ, அருளாகவோ, திருவுள்ளமாகவோ, சமூக நியதியாகவோ, இயற்கையின் மாறாத சட்டமாகவோ காணலாம்.**

✡ **பிரம்மஜனனமாகக் காண்பது நம் நோக்கம். அப்படிக் காண்பது வேறு, அப்படி மாற்ற முயல்வது வேறு. மாற்ற முயலாதிருப்பது பிரம்மஜனனமாகும்.**

அதிர்ஷ்டத்தை நாடும்பொழுது சமர்ப்பணத்திற்குக் காரியம் கூடிவருவதை எதிர்பார்ப்போம். சமர்ப்பணத்தின் பல்வேறு நிலைகளை முதற்பகுதி விவாதித்தாலும், யோகதத்துவமாக வாழ்வில் சமர்ப்பணம் வெளிப்படுவதை காரியத்தின்மூலம் இதுவரை விளக்கவில்லை.

✡ **சமர்ப்பணம் காரியத்தில் வெளிப்படுவது பிரம்மஜனனம்.**

✡ **காரியம் பெரியதாகக் கூடிவருவது பலன்.**

✡ **பலன் எவ்வளவு பெரியதானாலும், பிரம்மஜனனத்தின் இதர அம்சங்கள் - மௌனம், ஜோதி, ஞானம், சத்தியஜீவியம், சத்தியம், ஜீவியம், ஆன்மா - வெளிப்படுவது நம் கண்ணில் படுவதில்லை.**



✡ **கண்ணில் படாவிட்டாலும், அவை எப்படியிருக்கும்என ஓரளவு எடுத்துக்கூறலாம். அவை தெரிந்தால், நாம் காரியம் கூடிவரும்பொழுது அவற்றைத் தேடலாம்.**

✡ **சமர்ப்பணமும், சரணாகதியும் சத்தியஜீவியத்தை நோக்கிப் போகும் பாதைகள்.**

✡ **நாம் அப்பாதையை அறிவோம்.**

❀ **உள்மனம் போவது.**

❀ **அடிமனம் போவது.**

❀ **சைத்தியப்புருஷனை அடைவது.**

❀ **முனிவர் மனம் போவது.**

❀ **ரிஷி மனத்தைத் தொடுவது.**

❀ **யோகி மனத்தில் ஞானத்தை எட்டுவது.**

❀ **தெய்வலோகஞானம் பெறுவது.**

❀ **சத்தியஜீவியம் அடைவது.**

✡ **உள்மனம் சாட்சிப்புருஷனுக்குரிய மௌனத்திற்குரியது. இம்மௌனம் Static Silence அசைவற்ற மௌனமானால், சாட்சிப்புருஷனுடன் யாத்திரை முடியும். பிரம்மஜனனம் சிருஷ்டியின் அசைவிலுள்ளது. அதனால் சலனத்திலுள்ள மௌனம் தேவை. அதாவது சலனத்தால் கலையாத மௌனம் தேவை.**

✡ **இம்மௌனம் நிஷ்டையால் வாராது, சமர்ப்பணத்தால் வரும்.**

❀ **சிந்தனையைவிட மௌனம், சிந்தனைக்குக் கருவான மௌனம் சமர்ப்பணத்திற்குரியதுஎன மனம் ஏற்றால், அம்மௌனம் எழும்.**

❀ **கவர்னர்பார்ட்டிக்கு புதுடிரஸ் வேண்டும்எனப் பெரியவன் கேட்பது நிகழ்ச்சி. இதை ஏற்கலாம், மறுக்கலாம். இரண்டும் சமர்ப்பணமில்லை. என்ன பதில் கூறலாம்என சிந்திப்பதும் சமர்ப்பணமாகாது. என்ன பதில் சொல்வதுஎன்று சிந்திப்பதைவிட,**

அப்படிச் சிந்திக்காமல் இருப்பது - மௌனம் - பெரியதுஎன நம்புவது சமர்ப்பணத்திற்கு உதவும்.

❀ அது அடிமனத்திற்கு எடுத்துச் செல்லும். அடிமனம் செல்லும்பொழுது அடிமனம் பிரபஞ்சத்திற்குரியது என்பதால் மனம் பிரபஞ்சத்தை நோக்கி விரியும். சிந்திக்காத மௌனத்தால் மனம் பரந்து விரிவது நாம் அடிமனத்தை அடைவது. 'ஜில்' என்றிருந்தால் சைத்தியம் தீண்டுவதாகப் பொருள்.

❀ சைத்தியம் தீண்டியபின் மேலெழுந்து முனிவர் மனத்தை எட்ட வேண்டும்.

❀ நாம் இந்நிலையில் எட்டும் முனிவர் மனமும், முனிவருள்ள மனமும் வெவ்வேறானவை.

✡ முனிவர், ரிஷி, யோகி உலகைத் துறந்தவர்கள். அவர்கள் நிஷ்டையில் காலத்தைக் கடக்கிறார்கள். பிரம்மஜனனம் அதையும் கடந்து காலத்துள் செயல்படுவது.

❀ முனிவர் மனத்தில் உள்ள மௌனம் முனிவர் அறிந்த அசைவற்ற மௌனமல்ல. சலனத்தில் செயல்படும் பிரம்மஜனனத்திற்குரிய சைத்தியப்புருஷனுடைய மௌனம் அது.

❀ இவ்விரு மௌனங்கட்குமுள்ள வேறுபாட்டை எப்படி அறிவது?

❀ கவர்னர் நம் வீட்டு விருந்துக்கு வருவது முனிவர் அறியும் மௌனம்போல். கவர்னருக்குரிய ஜபர்தஸ்துபோல் மௌனத்திற்குரிய உயர்வு தெரியும். நம் வீட்டுப் பையன் கவர்னராகியபின் வீட்டிற்கு வருவது பிரம்மஜனனத்திற்குரிய மௌனம் போன்றது. இங்கு ஜபர்தஸ்திருக்காது, அந்தஸ்து இருக்கும். அது உறவில் வெளிப்படும்.

❀ ரிஷியின் ஜோதியும், யோகியின் ஞானமும், அதுபோல் பிரம்மஜனனத்திற்குரிய ஜோதியாகவும், ஞானமாகவுமிருக்க வேண்டும்.



❀ கவர்னர்பார்ட்டிக்குப் பெரியவனுக்குப் புதுடிரஸ் தேவை என்பது சமர்ப்பணமானால், பழைய டிரஸ்ஸுக்குப் புதுடிரஸ்ஸின் கௌரவமிருக்கும். புதுடிரஸ் தானே வரும். அந்த டிரஸ் பெரியவனை அசைக்காது, ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்காது, நிதானம் தரும். கவர்னர்பார்ட்டியில் மற்றவர்களைவிடப் பெரியவனுக்குக் கவனம் அதிகமாக இருக்கும். டிரஸ்ஸுக்குண்டான பொலிவு முகத்திலிருக்கும்; டிரஸ் மட்டும் பொலிவைத் தாராது.

❀ கவர்னர்பார்ட்டிக்கு அழைப்பு வந்ததுபோல் சமர்ப்பணம், பார்ட்டியில் பெரியவனுக்குக் கவனம், அந்தஸ்து, சந்தர்ப்பம், வளர்ச்சியைத் தரும். பெரியவனே சமர்ப்பணத்தை ஏற்றாலும், தாயார் சமர்ப்பணம் பெரியவனைத் தீண்டினாலும் இப்பலன்களும், வெளிப்பாடுகளும் தெரியும்.

❀ சமர்ப்பணம் குறைவானாலும், சத்தியம் நிறைவானாலும் ஓரளவு அது உண்டு.

❀ பெரியவன் புருவ மையத்தில் அன்னைஒளி அல்லது அன்னையே தெரிவது பிரம்மஜனனத்திற்குரிய ஜோதியாகும்.

❀ யோகி மனத்திற்குரிய பிரம்மஜனனஞானம் பெரியவனில் வெளிப்பட்டால், அவன் idea எண்ணத்தை கவர்னர்பார்ட்டிக்கு வந்தவர்கள் அனைவரும் ஏற்பார்கள். அது நாடெங்கும் பரவும்.

❀ மனத்தையும், அகநிகழ்ச்சிகளையும், புறவெளிப்பாடுகளையும் அப்படி இக்குடும்ப விஷயத்தில் சோதனை செய்தால், பலன் பெரியதாக எழுந்தாலும், சமர்ப்பணத்திற்குரிய அம்சங்கள் அதிக அளவில் வெளிவரவில்லை என்பது தாயார் அறிந்த செய்தி.

❀ பிரம்மஜனனத்திற்குரிய மௌனம் குதூகலமானது. உலகை நிரப்ப வல்லது. 1956இல் பொன்னொளி இறங்கியதை உலகின் தமஸ் விழுங்கியதைப்போல் சமர்ப்பணத்தால் வெளிப்படும் பிரம்மஜனன மௌனம், அதன் கலகலப்பான குதூகலம், குடும்பத்தின் தமஸால் விழுங்கப்பட்டு ஓரளவே மிஞ்சுகிறது.

- **எந்த நிகழ்ச்சியிலும் தாயார் பலனைவிட இதுபோன்ற இதர அம்சங்களைக் கண்டு தம்மையும், குடும்பத்தையும் கணிக்கிறார். கணக்கிடுவது முதலில்; அடுத்தது, கணக்கெடுப்பால் தம் நிலையை உயர்த்த முன்வருவது.**
- **உடலில் தெம்பில்லாதபொழுது சமர்ப்பணம் முடியாது. ஆனால் அந்த நேரமும் அன்னைநினைவு இருப்பது அவசியம். நினைவுக்கும் தெம்பு வேண்டும். நினைவுக்கும் தெம்பில்லாதவர் அன்பராக முடியாது. அன்னையை அறிவது பாக்கியம், நினைவுகூர்வது அருள் என்பதன் கருத்து அதுவே. பகவான் ஸ்ரீ அரவிந்தர் பாமர மக்களுக்கில்லைஎன அன்னை கூறுவது அதனால்தான்.**
- **அன்பர் அன்னையிடமிருந்து பெறுவது எதுவும் பிரம்மஜனனத்திற்கு உரியது. சாதகருடைய எந்தச் சாதனையும் பிரம்மஜனனத்திற்குரிய திருஷ்டியாகும். உலக வாழ்விலுள்ள எவரும், எந்தத் துறையிலிருந்தாலும், அவர் அன்பருக்கு நிகரில்லை என்பது அன்பரறிய வேண்டிய உண்மை. அதை மறந்தவர் அன்பர் என்ற தகுதியை இழப்பவர்.**
- **இக்குடும்பத்தில் தாயாருக்கு மட்டுமே இக்கண்ணோட்டமுண்டு. பார்ட்னருக்கு சற்று விளங்க ஆரம்பிக்கிறது. மற்ற எவருக்கும் இந்நிலை மனத்தைத் தொடவில்லை. *அன்பர் சாதிப்பது அன்னைஜீவியத்தில் சாதிப்பது. உலக வாழ்வின் சாதனைக்கு அந்தத் தகுதியில்லை.* நாம் அதைப் பெரும்பலன்என நினைப்பது பொருத்தமாகாது.**
- **உலகம் மனத்துள்ளிருப்பதால், மனம் சாதிப்பது உலகம் சாதிப்பதாகும். பெரியவன், "சொல்லுங்கம்மா, நான் செய்கிறேன்" என்பது அவனை ஒத்தவர் அன்னையை ஏற்பதாகும். கணவர் கம்பனியில் பார்ட்னராவது உத்தியோகஸ்தர் அனைவருக்கும் தொழிலதிபர் தகுதி வந்ததாகப் பொருள். வீட்டுவேலை செய்த**



**பெண் வெளிநாட்டு வரனைப் பெறுதல், எல்லா வேலைக்காரி-களுக்கும் அத்தகுதி வருவதைக் காட்டுகிறது. *அன்பர் அன்னையின் அரங்கம். சாதகர் அன்னையின் கருவி.***

- **இக்குடும்பத்தின் - எந்த அன்பர் குடும்பத்தையும் - எந்த நிகழ்ச்சியையும் நாம் அக்கோணத்தில் காணவேண்டும். குடும்பத்தினர் மனம் ஊசலாடுவது உலகம் அன்னையை ஏற்கத் தயங்குவதாகும்.**
  - **அன்பராவது சர்க்கார் உத்தியோகஸ்தராவதுபோல. குமாஸ்தாவில் இருந்து கவர்னர்வரை வேலை விரிவுபடும்.**
  - **நமக்கு சர்க்கார் வேலைக்குரிய இதர சௌகரியங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. அது பரிதாபம்; அர்த்தமற்றது.**
  - **சௌகரியங்கள் வேலைக்குட்பட்டவை. வேலை சௌகரியங்களால் வாராது.**
  - **சமர்ப்பணம் மனிதனை பிரம்மமாக்க வல்லது. சொர்க்கமும், மோட்சமும் அதற்குரியவை.**
  - **பிரம்மமே முதல், பிரம்மமே முடிவு. ஞானமும், சொர்க்கமும் பிரம்மத்திற்கு அர்த்தமற்றவை. அவை பகுதி. மனிதன் முழுமை. பிரம்மத்தின் முழுமை அவனுக்குரியது என்பதை அன்னை அவனுக்கு வழங்குகிறார்.**

இதுவரை நடந்தவை, இப்பொழுது நடப்பவை, இனி நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை இக்கண்ணோட்டத்தில் காண்பது இப்பகுதியின் நோக்கம். அது புரிய சமர்ப்பணமும், சரணாகதியும் நன்றாகப் புரிய வேண்டும். அடிமையாக வாழும் கூலிக்காரனுக்கும், பெண்ணுக்கும் ஆண்டவனிடம் அளவில்லாச் சுதந்திரத்தை வழங்குவது அன்னை. அதைப் பெற முன்வருபவர் குறைவு. நல்ல முறையில் பெற முன்வருபவரில்லை எனவும் கூறலாம். அகந்தையின் ரூபங்களில் இரண்டு அப்படி வெளிப்படும்.

1. *"நான் அப்படிப்பட்ட அதிகப்பிரசங்கியில்லை";*

2. *"எனக்கு அத்தகுதியுண்டெனில், அனைவரும் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும்".*

இவ்விரண்டு நோக்கங்களால், அகந்தை அகந்தையாகவே இருக்கப் பிரியப்படுகிறது. அவை அன்னையை விலக்கும் மார்க்கம்; ஏற்கும் மார்க்கமில்லை. 30 வருஷமாக வாராத மகசூல் வறட்சியான வருஷத்தில் வருகிறது என்பது **மகசூலை நிர்ணயிப்பது மழையில்லை, நம்பிக்கை** என அன்பர் அறியவேண்டும்.

✡ **பலன் அன்னைசெயல், சூழலின் செயல்.**

✡ **பலன் உலக நிபந்தனைக்குட்பட்டதன்று.**

✡ **பலன் நிபந்தனைக்குட்படாதது என்பது வாழ்வு கர்மத்திற்குட்படாதது என்பதாகும்.**

✡ **பலன் தருவது ஞானம், அன்னைஞானம்.**

✡ **அன்னைஞானம் தருவது அதன் முழுமையான அன்னையின் திறன்.**

✡ **அன்னையின் திறன் அன்னையைத் தரும் knowledge leads to power which is Mother.**

✡ **தாயாருக்கு இந்தத் தெளிவு இருந்தாலும், அவர் பகுதியான அதிர்ஷ்டத்தை நாடுகிறார்.**

✡ **அன்பருக்குரியது முழுமையான அன்னை; பகுதியான பலனோ, ஞானமோ, திறனோயில்லை.**

✡ **கம்பனியும், power projectம் அதிர்ஷ்டமன்று; அன்னையை அடையும் வாழ்வின் பாதைகள். இது அன்பருக்குரிய அஸ்திவாரம்.**

✡ **அஸ்திவாரத்தைக் காண்பது அன்னையைக் காண்பது.**

✡ **அதே காரணத்தால்தான் ஆபத்தை அன்பர் வாய்ப்பாகக் காண வேண்டும்.**



தாயார் தமக்கு ஆதாய மனப்பான்மையிருப்பது தடையென அறிவதில் ஒரு விசேஷம் உண்டு. ஆதாய மனப்பான்மை மட்டும் இருப்பது உண்மையானால் பெரியது எதுவும் பலித்திருக்காது. சிறியதும் பலித்திருக்காது. **ஆதாய மனப்பான்மை அதிர்ஷ்டத்திற்குத் தடை**யென மனம் உணரும்வரை எதுவும் பலிக்காது. தாயாருக்குப் பெரிய அம்சம், ஆத்மாவின் அம்சமிருப்பதால்,

✡ **அவருக்கு அன்னை தெரியவந்தது; அந்த அம்சமில்லாதவருக்கு அன்னை காதில் விழாது.**

✡ **அன்னை தெரியவந்து, அவர் ஏற்றதால் குடும்பம் 3ஆம் நிலையிலிருந்து 15ஆம் நிலைக்கு வந்தது ஆத்மாவின் அம்சம் இருப்பதால்தான்.**

✡ **பெரிய அம்சமும் சிறிய மனநிலையும் கலந்துள்ளது.**

✡ **தாயாருக்குத் தன் குறை மட்டும் தெரியும், நிறைவு தெரியவில்லை.**

✡ **குறையை நிறைவாக்குவது எப்படி?**

✡ **குறையை மனம் கவனித்தால் குறை வலுவடையும்.**

✡ **குறையிருப்பதை ஏற்றால் குறை நிறைவடையும், போகவே போகாது.**

✡ **குறையிருப்பதைக் கண்டு, அதைவிட்டு விலகி, நிறைவில் நிறைந்தால் குறை கரையும், மறையும். இது தாயார் அறியாதது.**

✡ **குறையை ஏற்காதது, வலியுறுத்தாதது, குறையைச் சமர்ப்பணம் செய்வதாகும்.**

✡ **குறையைச் சமர்ப்பணம் செய்வதில் எண்ணம், உணர்வு, உடலுணர்வு என்ற 3 நிலைகள் எல்லாச் சமர்ப்பணங்களுக்கும் உள்ளதுபோல், உள்ளன.**

✡ **எண்ணம் சமர்ப்பணமாக எண்ணமற்றுப் போகவேண்டும்.**

✡ எண்ணம், எந்த ரூபத்திலிருந்தாலும் - எரிச்சல், விருப்பு, நினைப்பு - நாம் எண்ணத்திற்குச் சமமாக இருப்பதால் எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியாது.

✡ எண்ணத்தைவிட்டு விலகாமல் எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியாது.

✡ எண்ணத்தைவிட்டு விலகினால், மனம் மௌனமாகும்.

✡ மௌனம் மனத்தின் மௌனமாகவோ, ஆத்மாவின் மௌனமாகவோ இருக்கலாம்.

✡ மௌனம் மனத்திற்குரியதானால் நல்லது; எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்யப் போதாது.

✡ ஆத்மாவுக்குரிய மௌனம் எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்யும்.

✡ அது நம்மை உள்மனத்திற்கு இட்டுச்செல்லும்.

✡ வளரும் ஆன்மாவுக்குரிய மௌனம் - சைத்தியப்புருஷன் - அடிமனத்திற்கு அழைத்துச்செல்லும்.

✡ எப்படி மனத்தின் மௌனத்தை, வளரும் ஆன்மமௌனமாக்குவது?

✡ மனத்தின் மௌனத்தில் censor எச்சரிக்கைமனம் பின்னணியில் இருக்கும்.

✡ ஆத்மாவின் மௌனத்தில் எச்சரிக்கை மௌனம் அமைதியாகும்.

✡ வளரும் ஆத்மாவின் மௌனத்தில் நன்றியறிதல், குதூகலம், பூரிப்பு எழும்.

✡ *கேள்வி: எப்படி மனத்தின் மௌனத்தை ஆத்மாவின் அல்லது வளரும் ஆத்மாவின் மௌனமாக்குவது?*

✡ நம்மை முக்கியமாகக் கருதினால் மனம் செயல்படும்.

✡ அமைதியை முக்கியமாகக் கருதினால் ஆத்மா செயல்படும்.

✡ இறைவனின் லீலையை முக்கியமாகக் கருதினால் சைத்தியப்புருஷன் செயல்படும்.



✡ சுயநலம் இறைவனின் நலமான பரநலமானால் மனத்தின் மௌனம் வளரும் ஆன்மாவின் மௌனமாகும். அதுவே சமர்ப்பணத்திற்கு ஈடாகும்.

✡ இதுவரை கூறியது தத்துவம்.

✡ கணவர் கம்பனியில் பார்ட்னரானவுடன் பரபரப்புடன் செய்தியைக் கொண்டுவந்தார்.

✡ இந்நிகழ்ச்சியில் மேற்சொன்ன சட்டங்களைத் தாயாரிலும், மற்றவரிலும் விவரிப்பது குடும்ப வாழ்வில் யோக அம்சங்களை விளக்குவதாகும்.

✡ கணவர் பரபரப்பாகச் செய்தியைக் கொண்டுவரும்பொழுது தாயாருக்கு இருக்கக்கூடிய நிலைகள்,

- ❀ தாமும் பரபரப்படைவது.
- ❀ கணவர் பரபரப்பாக இருப்பதை எண்ணமாக அறிவது.
- ❀ அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய தாயார் மனம் மௌனமாகி, மௌனம் நன்றியறிதலால் நிலைப்பது.
- ❀ அது சமர்ப்பணம்.
- ❀ அது சில நிமிஷமே நிலைக்கும், அதிகபட்சம் ½ மணி நிலைக்கும்.
- ❀ கொஞ்ச நாழி பலிப்பதை நிலையாக்க நிதானமான முயற்சி தேவை.
- ❀ அதற்கு அவசரப்பட்டால் வந்ததும் போகும்.
- ❀ பரபரப்பைச் சமர்ப்பணம் செய்ததுபோல் மற்ற நிகழ்ச்சிகளையும் சமர்ப்பணம் செய்ய முயலவேண்டும்.
- ❀ அதை நிதானமாகச் செய்வது ஆத்மாவின் முயற்சி; அவசரமாக செய்வது மனத்தின் முயற்சி.

❀ **நிதானமாக முயல்வதை, சமர்ப்பணம் செய்வது சைத்தியப்புருஷன் செயல்படுவது.**

❀ **இது பலிப்பது அதிகபட்சம்.**

❀ **அதிகபட்ச முயற்சியை நிதானமாக நீட்டிப்பது அதிகபட்சம்.**

தாயார் அதை ஒரு நாள் செய்தவுடன் கணவரும், பிள்ளைகளும் அமைதியாக, அன்பாக முகமலர்ந்து அருகே வந்து அமர்ந்தனர். அனைவர் முகங்களும் புன்னகையால் நிரம்பியது. இது மற்றவருடைய receptivity ஏற்புத்திறனை மெதுவாக வளர்க்கும். தாயார் குடும்பத்திற்கு அதிகபட்சம் செய்யக்கூடியது அது. It is personal. Better make it impersonal. அது சுயநலமில்லாவிட்டாலும் பொதுநலமாகாது; குடும்ப நலமாகும். தாமோ, குடும்பமோ பெறுவதை உலகம் பெறவேண்டும் என நினைப்பது பரநலம், பொதுநலம். தம் குடும்பத்திற்காகச் செய்வதை அன்னைக்காகச் செய்வது பரநலத்தைக் கடந்த பிரபஞ்ச நலமாகும். இந்தக் கோணத்தில்,

✡ **இனி வரும் செயல்களை ஏற்பதும்,**

✡ **இதுவரை நடந்தவற்றைச் சிந்தித்து, சமர்ப்பணம் செய்வதும் தாயாருக்குரியது.**

✡ **தாயாருக்கு இந்தத் தெளிவில்லாததால் காரியம் பெரிய அளவில் நடந்தாலும், மனம் குழப்பமாக இருக்கிறது.**

✡ **இத்தெளிவு மனத்தில் எழுந்தவுடன் பெரியவன் கம்பனியில் அன்னைமுறைகளை அமுல்படுத்த முனைகிறானென்று செய்தி வந்தது.**

✡ **பார்ட்னர் டெய்வானில் பாங்க் consultancyயை ஏற்பதை மனம் வருமானமாகக் கருதலாம். உலகுக்கு அன்னைமுறைகளை அறிமுகப்படுத்துவதாகக் கருதலாம்.**



✡ **இரண்டாம் மனநிலையைத் தாயாரும், பார்ட்னரும் ஏற்றால், அவற்றைக் குடும்பம் அழகாக ஆமோதித்தால், டெய்வான் வேலை வரும்.**

✡ **தாயார் அதை இப்பொழுது அறிவார்.**

✡ **செய்வாரா?**

✡ **செய்தால் எப்படிச் செய்வார்?**

✡ **அவர் குடும்பத்திற்கு வந்துள்ள வாய்ப்புகளில் இது மலை போன்றது. மனம் மலைபோல் அசையாமலிருக்குமா?**

✡ **நன்றியறிதலால் பூரிக்குமா?**

✡ **சமர்ப்பணம் தவிர உலகில் வேலையில்லைஎன ஏற்குமா?**

✡ **ஏற்றால் சந்தோஷம் பொங்கிவருமா?**

✡ **சந்தோஷமே சகலமும்என அறியுமா?**

✡ **பிறர் சந்தோஷம் பிரம்மனின்ஆனந்தம்என உதிக்குமா?**

இம்மனநிலையில் தாயார், பெரியவனை அடியாட்கள் தேடியதை, எப்படிப் புரிந்துகொள்வது; அதற்கு இப்பொழுது என்ன செய்வது என யோசனை செய்தார்.

✡ **இந்த யோசனைக்குரிய சமர்ப்பணம் எல்லாப் பதில்களையும், எல்லாப் பலன்களையும் தரவல்லது.**

✡ **சமர்ப்பணம் பலிக்கும் நேரம் தாயார் சமர்ப்பணத்தைக் கடந்து யோசனையை நாடுவதில்லை. அதற்குரிய பலன் உடனே பெரியவனில் தெரிகிறது.**

✡ **குடும்ப நிலை உயரும்பொழுது assertion தன் பெருமையை நிலைநாட்ட விரும்பும் எண்ணம் தன் மனதிலிருப்பது பெரியவனுக்குப் பேச்சு சூடாக வருவதாகத் தாயார் கண்டார்.**

✡ **அந்த நோக்கம் அவனுக்கு ஆபத்தைக் கொண்டுவந்தது.**

✡ தவறுஎன செயலிலில்லாவிட்டாலும், மனம் தவற்றை நாடியபொழுது, வாழ்வு அதற்குரியதை அருகில் கொண்டுவந்தது.

✡ தாயாருக்கு ''குடும்பம் உயரவேண்டும்'' என்பது தவறுஎன எடுத்துக்கொள்ள முடியவில்லை. உயர்வு உள்ளே ஜீவியத்தில் (consciousness) வந்து, அந்தஸ்தைப் பிறர் ஏற்க வேண்டுமே தவிர நாமே உயர்த்தக்கூடாதுஎனப் புரிய நாளாயிற்று.

✡ புரிந்ததை ஏற்க அதிக நாளாயிற்று.

✡ ஒரு நாள் மனம் அதை ஏற்றவுடன் கம்பனியிலிருந்து வந்த செய்தி பெரியவனின் பெருந்தன்மையைப் பாராட்டியது - அது இல்லாத பெருந்தன்மை.

✡ அன்னை அதிக மகசூலை வறட்சியிலும், எழுதாத பரீட்சைக்கு II கிளாஸும், கொட்டகை வீட்டிற்கு கவர்னர் வருவதும், எளிய வாழ்வுக்கு எட்டாத புகழையும் தருவார் என்பதைத் தாயார் பெரியவனின் 'பெருந்தன்மை'யில் கண்டார்.

✡ சமர்ப்பணம் பதிலுடன் பலனையும் தந்தாலும், ஒரு நாளில் ½ மணி நேரம் அத்தனைக் காரியங்களையும் சமர்ப்பணம் செய்ய முடியவில்லை.

✡ பெரியவனின் 'பெருந்தன்மை' ஏற்கப்பட்டவுடன், பெரியவன் அதை உண்மையிலேயே பெறவேண்டும், அதற்குச் சமமாக தாம் எதைப் பெறவேண்டும் எனத் தாயார் யோசனை செய்தபொழுது "சமர்ப்பணமே சர்வமும்" என்பதைத் தாம் ஏற்கவேண்டும் எனப் புரிந்தது.

✡ இனிப் புரிந்தது செயல்படவேண்டும்.

✡ சிறியவனைக் கேலி செய்யாமலிருக்க முடியவில்லை என்பது பெரியவன் நிலைமையானால், தம் நிலை என்ன?

✡ குடும்பம் முன்னுக்கு வரவேண்டும் என்பதை உள்ளே ஜீவியம் உயரவேண்டும்என மாறவேண்டும் என்பது தாயாருக்குத் தெளிவானபின்பும், மனம் முன்போலவே இருப்பது தெரிந்தது. அப்படி நினைக்கவே ஆசையாக இருக்கிறது.



✡ Valueless ciphers அர்த்தமற்றசூன்யங்கள்என அன்னை கூறியவர்கள் ஆத்மா, உயிர், உடமை, உழைப்பு ஆகியவற்றுள் ஒன்றைப் பூரணமாக அன்னைக்குக் கொடுத்தவர்கள். நமக்கு அர்த்தமற்றசூன்யம் என்ற தகுதியும் கிடைக்கவில்லை.

✡ அன்னைக்கு உண்மையான குழந்தைகள் true children of the Mother என்பதை நாம் ஏற்க இடைப்பட்ட நிலையில் அர்த்தமற்ற சூன்யமாக வேண்டும் என்பதில்லைஎன்று இப்பொழுது தாயாருக்குப் புரிகிறது. புரிவது, புரிவதுடன் நிற்கிறது. செயல்படுத்தினால் பலிக்கும் என மனம் நம்புகிறது. செயல் எழவில்லை.

## அம்சமும், அலட்சியமும்

தாயாருக்கு அன்னைஅம்சமுண்டு. குடும்பம் அன்னையை அலட்சியப்படுத்துகிறது. இது உள்ளது. எத்தனை கோணங்களில் இருந்து இதை விமர்சிக்கலாம்?

1. தாயார், அம்சமிருந்தபொழுதும் தமக்கு யோகமில்லைஎன நினைப்பதால் - அலட்சியப்படுத்துவதால் - குடும்பம் அன்னையை அலட்சியப்படுத்துகிறது.
2. அன்னையை அறியும் பாக்கியம் பெற்றவர் தன்னையறிந்தால் அன்னை அவரை அதிகமாக அறிவார்.
3. தாயார் தம்மை இதர மக்கள்போல அறிவதால், அன்னை எதிர்பார்ப்பதுபோல் அறியாததால், குடும்பம் இப்படியிருக்கிறது.
4. அன்னை தருவதைப் பெறுபவர், அன்னையைப் பெற மறுக்கிறார்.
5. நதி கடலில் சங்கமமாவதுபோல் அன்பர்கள் இருக்கிறார்கள். கடலில் சங்கமமாகுமுன் நதி ஆயிரக்கணக்கானவர்க்குப் பயன்படலாம். அன்பர்கள் சுயநலம் பயன்படாத நதிபோல் உள்ளது.

6. **புறநோக்கு அலட்சியம், உள்நோக்கு அம்சத்திற்குரிய அதிர்ஷ்டம்.**
7. **அன்னையை தெய்வமாக வழிபட்டால், ரிஷி பெற்ற பலனைப் பெறலாம். காலத்துள் மலரும் கடந்த நிலைக்குரிய பிரம்மமாக அன்னையை அறிவது அணுவில் அனந்தன் வெளிப்படுவதாகும். தாயாருக்கு ரிஷியின் மனநிலை.**
8. **ரிஷியை மக்கள் பின்பற்ற முடியாது. ஜனகன் - வளரும்ஆன்மாவின் மலர்ச்சி - வாழ்ந்த வாழ்வு உலகை உய்விக்கும். தாயாருக்கு ஜனகன்அம்சமுண்டு. அவர் ரிஷியாக வாழ நினைக்கிறார்.**
9. **தாயாருக்கு ஊரும், உலகமும் அடங்கும். அவர் கம்பனி, குடும்பம்வரை அக்கறைகொண்டுள்ளது, மற்றதை அலட்சியப் படுத்துவதாகும்.**
10. **தமக்குரிய அன்னைஅம்சத்தைத் தாயார் முழுமையாகப் பாராட்டாததுபோல், குடும்பம் தமக்குரிய அதிர்ஷ்டத்தைப் பொருட்படுத்தவில்லை.**

கங்கையோ, காவிரியோ உற்பத்தியாகும் இடத்தில் பார்ப்பவர் அவை இவ்வளவு பெரிய நதியாக வரும்என நினைக்க முடிவதில்லை. அம்சமுள்ளவர் தம் குடும்ப வாழ்வைக் கருதினால், அம்சம் வெளிப்பட்டபின் வாழ்வு எப்படி மலரும் என்பதை அறிய முடியாது. அதை அறிவது ஆத்மவிழிப்பு. தாயார் கணவரோ, பிள்ளைகளோ எவ்வளவு முன்னுக்கு வரலாம்என்று நினைக்கிறாரோ, அதுபோல் தாம் எந்த அளவுக்கு ஆத்மாவில் முன்னேறலாம் என அறிய முடியவில்லை.

✡ **அன்னையை அறிவது அதிர்ஷ்டம்;**

✡ **அகத்திலுள்ள அன்னையை அறிவது அருள்**

என்பதில் தாயார் முதற்கருத்தை அறிவார். அடுத்ததை அறியமாட்டார். பேரருள் அதற்கும் அடுத்தது. அதைப் பலவாறு கூறலாம்.



பேரருள் இக்குடும்பத்தில்,

✡ **குடும்பம் தாயாரை அறிந்து ஏற்பது.**

✡ **தாயாருக்குத் தம் அன்னைஅம்சம் தெரிந்து நிறைவேற்றுவது.**

✡ ***அகத்திலுள்ள அன்னை புறத்தின் செயலில் வெளிப்படுவது.***

தாயாரிடம் அன்னையைப் பொருத்தவரை தாம் எதையும் ஆரம்பிப்பதில்லை. சர்வ ஆரம்பப் பரித்தியாகி என்ற இலட்சியம் அவர் வாழ்வுக்குப் பொருந்தும்.

✡ **ஆரம்பிப்பது அகந்தை.**

✡ **அகந்தை, ஆண்டவன் உத்தரவு இன்றி வேலைகளை ஆரம்பிக்கின்றது.**

✡ **நாம் செய்யும் எல்லா வேலைகளும் அப்படிப்பட்டவை.**

✡ **சமர்ப்பணம் பலித்தபின் நாமாக - அகந்தை - எதையும் ஆரம்பிக்கக் கூடாது.**

✡ **இது தாயார் கடைப்பிடிக்கும் கொள்கை.**

✡ **பெருங்காரியங்கள் குடும்பத்தில் நடப்பதற்கு இது ஒரு முக்கியக் காரணம்.**

✡ **இதற்குரிய சந்தர்ப்பமும், காரணமும் இரண்டு.**

1. **பெண் என்பதால் தாயார் கம்பனி விஷயங்கள், வெளி விஷயங்களில் செய்வதற்கு ஒன்றுமில்லை.**
2. **ஆரம்பிக்கும் நிலையிலுள்ளவர் ஆரம்பிக்காதது பரித்தியாகம். ஆரம்பிக்க முடியாத நிலையிலுள்ளவர் ஆரம்பிக்காதது விசேஷமில்லை.**

✡ **சந்தர்ப்பமிருந்தாலும், இல்லாவிட்டாலும், மனம் பதைத்து, அதைச் செய், இதைச் செய் என்பவர்போல் அவரில்லை என்பது உண்மை.**

✡ **கம்பனி, பாக்டரி போன்றவற்றை இவர் ஆரம்பிக்க முடியாவிட்டாலும், வந்தபின் அவசரப்படாமலிருப்பது ஒரு discipline, கட்டுப்பாடு. இது ஒரு negative discipline தொந்தரவு செய்யாத குணம் என்றாலும் இதுவரை நடந்தவை இந்த உயர்ந்த குணங்கட்கே நடந்தன. அதுவும் தாயாருக்குச் சரிவரத் தெரியாது.**

✡ **நாம் அருளுக்கு இடைஞ்சலாக இல்லாவிட்டால் பெரிய காரியங்கள் நடக்கும் என்பதற்கு power project, consultancy ஆகியவை நல்ல உதாரணம்.**

✡ **இந்த விஷயம் தாயாருக்குத் தெரியாது என்பதால், எப்படி positive discipline இந்தச் சந்தர்ப்பத்தில் அன்னைக்கு உகந்தவராகத் தாயார் நடந்துகொண்டிருக்க முடியும் என்ற சிந்தனை அவருக்கு எழவில்லை.**

✡ **தாயார் பாஸிட்டிவாக இருந்திருந்தால் அவர் பார்ட்னரிடத்தில் இருந்திருப்பார்.**

✡ **பார்ட்னருக்கு அன்னையைத் தெரியாது என்றாலும், அவர் positive personality பாஸிட்டிவ் பர்சனாலிட்டி என்பதால் அவருக்கு அவருடன் உள்ள - கணவர் - வருக்காக இப்பெருஞ்சந்தர்ப்பங்கள் எழுந்தன.**

✡ **வந்தவை தாயாருக்காக வந்தவை. தாயார் பெண் என்பதாலும், அவர் கணவர் தொழிலுக்குரிய படிப்பில்லாதவர் என்பதாலும், அவருடனிருந்த பார்ட்னருக்கு, கணவருக்காக வாய்ப்புகள் வந்தன.**

✡ **தாயாரும், குடும்பமும் தற்சமயம் மனத்தால் பாஸிட்டிவானால், பார்ட்னருக்கும் குடும்பத்திற்கும் உள்ள உறவு தலைகீழே மாறும்.**

## கேலி

சமூகத்தில் ஒன்று புதியதாய் நடந்தால் அதற்குரிய வரவேற்பு பாராமுகம், எதிர்ப்பு, கேலி எனப் படிப்படியாய் மாறும். புதிய மதங்கள், அரசியல் கட்சிகள் ஆரம்பத்தில் காண்பவை இவை. ஒருவன் புதிய



பயிர் செய்தாலும், ஒரு பள்ளிக்கூடம் புதிய முறையைக் கைக்கொண்டாலும், ஒரு டாக்டர் வழக்கத்திற்கு மாறாக நடந்தாலும், எது புதியதானாலும், ஊர் முதலில் அப்படி ஒரு விஷயம் நடப்பதாகக் கண்டுகொள்ளாது. அப்பாராமுகத்தால் புதியவை அழிவதுண்டு. அழியாமல் அது வளர்ந்தால் எதிர்ப்பு எழும். எதிர்ப்பை மீறி அது ஜெயித்துவிட்டால் கேலி செய்வார்கள். புதிய இயக்கங்கள் எதிர்ப்பையும் மீறி ஜெயித்த பின்னும் கேலியைப் பொறுக்க முடியாமல் திணறுவார்கள்.

***எதிர்ப்பை ஜெயித்தவர் கேலிக்குப் பலியாவதுண்டு.***

சர்ச்சில் போர்க்களத்திலிருக்கும்பொழுது அவரைச் சுற்றி அருகில் குண்டு பாயும். சர்ச்சில் கலங்கமாட்டார். அஞ்சாநெஞ்சம் கொண்டவர். "போர்க்களத்தில் தேவைப்படும் தைரியம் பார்லிமெண்ட்டில் எதிர்ப்பைச் சமாளிக்கப் போதாது" என்கிறார் சர்ச்சில். எதிர்ப்பு உடல் மீது விழும் அடி. கேலி நெஞ்சைச் சுடும் புண். கேலியை ஒருவன் கைக்கொண்டால் அவன் குத்தலாகப் பேசுவான்.

✡ *நம் வாழ்வில் மறைந்துபோன தவறுகள் அவனுக்குத் தவறாமல் நினைவு வரும்.*

✡ *நம்மிடம் இல்லாத குறைகளைக் கூறி பலரையும் சிரிக்க வைப்பான்.*

இருக்கும் குறையைச் சொல்லும்பொழுது அளவுகடந்த கோபம் வரும். அவன் மேலும் கிளறுவான். "உள்ளதைச் சொன்னால் பொறுக்கவில்லை" என்பான். மனிதச் சுபாவம் இல்லாத குறையைச் சொன்னால் சிரிப்பதற்குப் பதிலாக, அதிகமாகப் புண்படும். கேலி, கிண்டல், குத்தல், குதர்க்கமாகப் பேசுபவர்கள், "நான் அப்படிச் சொன்னால், நீ என்ன செய்வாய்?" எனக் கேட்பார்கள்.

***திட்டுவதை, அடிப்பதைப் பொறுத்துக் கொள்ளலாம், கிண்டல் செய்வதைப் பொறுக்க முடியாது.***

சமூகத்தில் கேலி எப்படி எழுந்தது? வசதியாய் வாழ்ந்தவன் தாழ்ந்தபின் அவனுடனிருந்தவர்கள் வசதி பெற்றதைத் தாங்கமுடியாமல், தடுக்க முடியாமல் பயன்படுத்தும் கருவி கேலி. Ridicule என்பது பொருத்தமான சொல். ஒருவன் பெற்ற வசதியைப் பெறமுடியாதவன் பொறாமையால் பயன்படுத்தும் ஆயுதம் ridicule.

**கேலி தோல்வி பெற்ற ஏழையின் பண்பற்ற ஆயுதம்.**

பெரியவனுக்கு அது உண்டு. இது தரித்திரத்தின் சின்னம். தகப்பனார் பண்பற்ற குடும்பத்தினர். அவர் குணம் அவனுக்கு வந்துள்ளது. அதன் சுவடுள்ள இடத்தில் அதிர்ஷ்டமோ, அருளோ நிற்காது. MLA ஆகி, மந்திரியானபின் இவன் ஏற்கனவே ஜெயிலுக்குப் போனவன் என்ற செய்தி வெளிவந்தால் அவன் பதவியிலிருக்க முடியாததுபோல், கேலியுள்ள இடத்தில் அருள் அரை நிமிஷமிருக்காது. தாயாருக்குத் திருமணத்தில் uncultured man பண்பற்ற கணவன் அமைந்த இடத்தில் இதன் வேர் உள்ளது. அது திருவுருமாறாமல் பிரச்சினை தீராது. அதனால்தான் பெரியவனை அடியாட்கள் தேடுகிறார்கள். தாயாருக்கு "**உள்ளே வேலையுள்ள இடம்**" இது - கேலி.

## பலித்த சமர்ப்பணம்

முழுவதும் பலித்த சமர்ப்பணம் பூரணஅதிசயம். அதைப் பார்த்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள், அருளுக்குரியவர்கள். அது பிரம்மஜனனம், பூலோகச்சுவர்க்கம். அதில் குறை வாராது. குறை திருவுருமாறி நிறையாகும் மார்க்கம் அது.

✡ **குறை தானே திருவுருமாறும் இடம் சமர்ப்பணம் பூரணமாகப் பலிக்கும் நேரம்.**

✡ **சமர்ப்பணம் பூரணமாகப் பலித்ததற்கு அடையாளம் குறை நிறையாவது.**



✡ **மனிதன் முயன்று தானே தன் குறையையும், பிறர் குறையையும் திருவுருமாற்றும் மனப்பான்மை உலகம் துன்பத்தை இன்பமாக மாற்றும் பாதை.**

இதற்குமுன் கட்டம் உண்டு.

✡ **அது சமர்ப்பணம் பெரும்பாலும் - பூரணமாக இல்லை - பலிக்கும் நேரம்.**

✡ **Let Thy will be done, not my will.**

அன்னையின் திருவுள்ளம் பலிக்கட்டும், என் எண்ணம் பலிக்க வேண்டாம் என்பதைத் தொடர்ந்து சொல்ல வாராது. சொன்னால், அதற்குரிய பாணியில் சொல்வது இயலாது. அதற்குரிய பாணி என்பது நம் எண்ணம் பின்வாங்கி, அன்னைவிருப்பம் மேலோங்குவது. ஆழ்ந்த நம்பிக்கை நாளடைவில் பக்தியாவதுண்டு. ஆழ்ந்த பக்தி நம்பிக்கையாவதுண்டு. நம்பிக்கை மனத்திற்குரியது. பக்தி நெஞ்சத்திற்குரியது. பக்தியும், நம்பிக்கையும் இணைவது,

✡ **மனமும் உணர்வும் இழைவதாகும்.**

✡ **மனம் உணர்வாகி, உணர்வு மனமானால் ஜீவன் உயரும்.**

✡ **அதுவே அன்னைக்குரிய நேரம்.**

Let Thy will be done என்பதையும் not my will என்பதையும் சொல்ல முடிவது ஆத்மா இசைவது. அப்படிச் சொல்லும்பொழுது not my will என்பது நம் விருப்பத்தை ஒதுக்குவதையும் Let Thy will be done என்பது அன்னையின் அருளை ஆதரிப்பதையும் காணலாம். இந்நிலைக்கு வந்த பக்தன், அருள் பெறும் நேரத்திற்குரியவன்.

✡ **அந்த அற்புதமான நேரத்தில் censor மனம் போதும் எனக் கூறும்.**

✡ **வேறு வேலை செய்ய வேகம் வரும்.**

- ✡ **எதற்கும் அளவில்லையான மனம் கேட்கும்.**
- ✡ **இந்த வக்ரங்கள் எழாமல் தொடர்ந்து சொல்ல மனம் விழைவது அன்னை நம்மை ஆட்கொண்டதற்கு, நம்மையும் மீறி ஆட்கொண்டதற்கு அடையாளம்.**
- ✡ **அப்படிப்பட்ட உன்னத நேரத்தில் பழைய ஆசைகள் அதிகமாகப் பூர்த்தியாகும் சந்தர்ப்பங்களை அன்னை தருவது வினோதமான முரண்பாடாகத் தெரியும்.**
- ✡ **அவ்வாசைகள் முடிவாக அழிய அவற்றை ஏற்பது சரி. அவற்றுள் திளைக்கும் மனப்பான்மை, மேலும் மேலும் அனுபவிக்கும் மனப்பான்மை, தருணத்தை இழக்கும் மனப்பான்மையாகும்.**

சாவித்திரி தன்ஆத்மாவின் பகுதிகள், எமன் காட்டும் ஆசைகளைக் கடந்து வந்தபின் இறைவனே அவ்வாசைகளைப் - மோட்சம், சொர்க்கம் - பூர்த்தி செய்யச் சொல்கிறார்.

**சாவித்திரி மறுத்துவிடுகிறாள்.**

அந்தக் கட்டம் எல்லோர் வாழ்விலும், எந்த நேரமும் எழும். இக்குடும்ப வாழ்வில் அப்படி எழும் நேரங்களில் அவர்கள் எப்பாதையைத் தேர்ந்தெடுத்து எப்படிச் சாதித்தனர், எப்படித் திணறினர் என்பது நாம் கவனிக்கக்கூடியது.

- ✡ **மனிதச் சுபாவம் மேலெழுந்தவாரியாக நேராகவும்,**
- ✡ **ஆழத்தில் எதிராகவுமிருப்பதை இக்குடும்பத்தில் காண்கிறோம்.**

கணவர் அடிக்கடி மனைவியிடம், "நீ சொல்வதைச் செய்கிறேன்" என்பது சரியாக இருப்பது, "நானாக இருந்தால் அவனை அறைவேன்" என்பது ஆழத்தில் எதிராக நடப்பது. மனத்தை இரண்டிற்கும் நடுவே நிறுத்தினால் அது படும்பாடு தெரியும்.



- ✡ **பாடுபட்டுச் சரியானால் போதும்.**
- ✡ **பாடுபடாமல் சரியாவது சரி.**
- ✡ **சரியான பக்கம் மாற சந்தோஷப்படுவது அருளை ஏற்பது.**

அண்ணன் கேலி செய்தபொழுது தம்பிமுகம் வாடுகிறது. மாமா ஆக்ராவுக்கு அழைத்துப்போகிறேன் என்றவுடன், அதைத் தெரிந்து கொள்ளாமல் முகம் மலர்வது சிறியவன் அருளுக்குரியவன்என்று தெரிகிறது. டெய்வான் consultancyயைப் பற்றிப் பேசும்பொழுது, கணவர் பார்ட்னரிடம், "அப்படி வேலை வந்தால், நான் கம்பனியைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்றது சந்தோஷமாகச் சரியான முறையில் செயல்படுவதாகும். நகை வியாபாரியை வீட்டிற்கு நகையைக் கொண்டுவரச் சொல்வது பாடுபடாமல் தவறாக இருப்பதாகும். கம்பனி சென்னையில் இல்லாவிட்டால் வேண்டாம் என்பதும் அப்படிப்பட்ட குணமாகும்.

**அம்மனநிலையை அவரவர் சோதனை செய்ய வேண்டும். தாயார் அந்த நேரம் தம் பங்கு உச்சக்கட்ட உயர்விலிருக்கிறதா எனச் சோதிக்க வேண்டும்**. கணவரோ, பிள்ளைகளோ அப்படிப் பேசும்பொழுது தாயார்,

- ✡ **எப்படியோ, தகராறில்லாதது சரிஎன நினைக்கலாம்.**
- ✡ **தம் மனம் கணவருக்கு ஏற்றபடி நிலைமை அமைய விரும்பலாம்.**
- ✡ **கணவர் மாறவேண்டும்என விரும்பலாம்.**
- ✡ **கணவரைப் புறக்கணித்து, தம் மனம் சரியான பக்கம் சந்தோஷமாகப் போக முயல்வது சமர்ப்பணத்திற்குச் சமம்.**
- ✡ **சமர்ப்பணம், சந்தோஷமாகச் சரியான பக்கம் போக அனுமதிக்கும்.**
- ✡ **நடந்தவற்றைத் தாயார் இதுபோல் மாற்றுவதும்,**
- ✡ **இப்பொழுது நடப்பதில் மனம் தானே சந்தோஷமாகச் சரியானபடி இருப்பதும்,**

✡ எதிர்காலத்தை நினைக்கும்பொழுது மனம் இப்பொழுது அப்படி இருப்பதும் தாயார்கடமை என்பது தாயாருக்கு முழுவதும் புரியவில்லை.

## சிறியதும், பெரியதும்

✡ பெரியது (Infinite) சிறியதாக (finite) உள்ளது.

✡ சிறியது பெரியதாக மலர்வது மனிதவாழ்வு தெய்வீகவாழ்வாவது.

✡ ஒருவர் வாழ்வில் அதிர்ஷ்டம் செயல்பட்டால், அருள் அவரை நாடிவந்தால் சிறியதும், பெரியதும் மோதும்பொழுது அவர் மனம் பெரியதைப் பாராட்டும்.

✡ Power projectக்காக டெல்லி போகவேண்டுமென்றால், அந்த நேரம் எந்தச் சிறியதை நம் மனம் விடமுடியாதோ அது நேரடியாக எழுந்து மோதும். *கோயம்புத்தூருக்குக் காரில் போகாவிட்டால், போக வேண்டாம்என மனம் கூறும்.* அது வரக்கூடாது. அப்படி வந்தால் வலியுறுத்தக்கூடாது. வயிற்று வலியுடைய குமாஸ்தாவின் நிலை தெரியாமல் ஆபீசில் 9 மணிக்குமேல் அரட்டை அடிக்கத் தோன்றும். வலிந்து பிறருக்கு உதவத் தோன்றும். உறவினர் துக்க விசேஷத்திற்கு அவசியம் போகவேண்டும்என மனம் வற்புறுத்தும்.

✡ பெரிய மனப்பான்மை இருந்து சரியாகச் செயல்பட்டாலும், அடுத்த அடுத்த கட்டங்களில் 'இனி லஞ்சம் கொடுக்காமல் காரியம் நடக்காது' என மனம் வற்புறுத்தும்.

✡ நம் மனம் சிறியதை நாடக்கூடாது.

சிறியதில் மனமிருந்தால், அதை மலரவிடாமல், அதனுள் உள்ள பெரியதை நாடி, அது மலரும் வகையில் செயல்பட வேண்டும்.

✡ கவர்னர்பார்ட்டிக்கு மனம் புதுடிரஸ்ஸை நாடக்கூடாது.

✡ கணவர் அது சரியெனப் பேசக்கூடாது.

✡ தாயார் பிள்ளையின் ஆசை தவறில்லைஎன நினைக்கக்கூடாது.



✡ டிரஸ் சிறியது, கவர்னர்பார்ட்டி பெரியது.

✡ மனம் டிரஸ்ஸை விட்டுப் பார்ட்டியை நாடவேண்டும்.

✡ நாடுவதில் சந்தோஷப்படவேண்டும்.

✡ *Negativeவாகப் பேசக்கூடாது,* நினைக்கக்கூடாது.

✡ இலாபம் வரும்வரை காணிக்கை அவசியம்எனப் பேசிய மனம், இலாபம் வந்தவுடன் 'எனக்கு அவ்வளவு பெரிய மனமில்லை' எனத் தனக்குத் தானே கூறிக்கொள்வது 'நான் மெய்யை எனக்கு ஆதாயமான நேரம்வரை ஆதரிப்பேன்' என்பதாகும்.

✡ மிகச் சிறியது - காரில் போவது, டிரஸ் - மிகப் பெரியதற்குச் சரியான சமயத்தில் நேர் எதிராக எழும்பொழுது மனம் க்ஷணம்கூட எதிராக இருக்கக்கூடாது.

✡ அந்தப் போட்டியில் வெற்றி பெறுவது அதிர்ஷ்டம்.

✡ அப்போட்டி வாராதது அருள்.

✡ மனம் சந்தோஷமாகப் பெரியதை நாடுவது, சிறியதில் பெரியதைக் கண்டு பூரிப்பது பேரருள்.

✡ தாயார் முதல் நிலையிலிருக்கிறார்.

✡ அவர் யாத்திரை நீண்டது.

கணவர் "என்ன வந்தது, எப்பொழுது வந்தது, எனக்குத் தெரியாமல் வந்ததா, வந்து என்ன புண்ணியம்?, வந்தது பலிக்கவில்லையே, பலிக்காததினால் என்ன பயன்?, அருள் தானே செயல்படுவதாயிற்றே, ஏன் செயல்படவில்லை?, நான் வேண்டாம்எனச் சொல்கிறேனா?" என்று ஆரம்பத்தில் பேசினார்.

✡ இது தரித்திரத்தின் குரல்.

✡ ''நான் டிகிரி எடுத்துவிட்டேன். ஏன் எனக்கு வேலை கிடைக்கவில்லை?" என எவரும் கூறுவதில்லை. வேலை கிடைக்கப்

படாதபாடுபடுகின்றனர். கிடைத்தால் போற்றுகின்றனர். அதைக் காப்பாற்ற உயிரை விடுகின்றனர். அப்படிப்பட்ட வேலையை ஒருவர் தேடிவந்து கொடுத்தால், இந்த ஊரில் வேண்டாம், இந்த கம்பனியில் வேண்டாம் என்பதும், இப்பொழுது வேண்டாம் என்பதும் சரியாகாது. வேலை சிரமம், வேறுவேலை வேண்டும் என்பவரும் உண்டு. இவை எம்மனநிலைக்குரியவை? நாம் தேடிப்போக வேண்டியது நம்மை நாடி வருகிறது என்பது அருள். அருளுக்குத் தகுதியற்றவர் அருளுக்கு நிபந்தனை விதிப்பது, 'என் தரித்திரத்திலிருந்து நான் விலகமாட்டேன்' என அறிவிப்பதாகும்.

✡ தரித்திரம் என்ற தமிழ்ச்சொல் அர்த்தபுஷ்டியானது. அது ஏழ்மை, வறுமையாகாது. வசதியில்லாதது ஏழ்மை. வசதிக்குத் தகுதியில்லாதது தரித்திரம். எட்டு லக்ஷ்மிகள் இருப்பதைப்போல், தரித்திரத்திற்கும் பல ரூபங்களுண்டு,

- ❀ இல்லாதது ஏழ்மை.
- ❀ சுபாவத்திற்கு வறுமை வேண்டும், வசதி வேண்டாம் என்றால் அது சுடுமூஞ்சியாக இருக்கும்.
- ❀ அது உச்சக்கட்டத்தில் சொற்களால் வெளிப்படும்.
  - ✰ புரியலையா என்பதை ஏறலையா என்பதும்,
  - ✰ சாப்பாடு பிடிக்கவில்லை என்பதை இறங்கவில்லை என்றும்,
  - ✰ நல்ல சொற்களுக்குப் பதிலாக மட்டமான சொற்களைப் பயன்படுத்தும்.
- ❀ நண்பர்களாக இயல்பாக, தரித்திரமானவர்களைத் தேடும்.
- ❀ ஒருவரைக் கண்டவுடன் அவர் குறைகளைக் கண்டுகொண்டு, நினைவு வைத்திருக்கும்.
- ❀ பெருந்தன்மையைக் கயமையாகப் புரிந்துகொள்ளும்.
- ❀ பண்பான மக்கள் பேச கூச்சப்படும் சொற்களை ஆரவாரமாக, ஆர்ப்பாட்டமாகப் பேசிக் கொண்டாடும்.



- ❀ ஆதாயத்திற்கு மட்டும் மெய் பேசும்.
- ❀ தான் சொல்வதைப் பிறர் ஏற்கவேண்டும், எவர் சொல்வதையும் தான் ஏற்கமாட்டேன்எனக் கூறும்.
- ❀ ரோஷம் அதிகமாக இருக்கும்.
- ❀ சாமர்த்தியமாக இருக்க முயலும்.
- ❀ தோற்றத்தைப் போற்றும், நம்பும்; பிறர் நம்பமாட்டார்என அறியாது.
- ❀ எள்ளளவு திறமையில்லாதபொழுதும் ஏராளமான கிராக்கி செய்யும். கிராக்கி செய்யப் பெருமைப்படும்.
- ❀ அதிர்ஷ்டம் வரப்போகிறது என்றால் முன்கூட்டி எதிரானவற்றை எல்லாம் செய்யும்.
- ❀ பொய்க் காரணம் காட்டி, அதிர்ஷ்டத்தைத் தவறுஎனவும், மட்டம்எனவும், தரித்திரம்எனவும் பேசும்.
- ❀ *தரித்திரம் என்ற சொல் இத்தனைக் கருத்துகளையும் கொண்டது, அர்த்தபுஷ்டியானது; அதிர்ஷ்டம் என்ற சொல்லுக்கு நேர் எதிரானது.*

கணவர் தரித்திரமானவர்; தாயார் அதிர்ஷ்டமானவர். உச்சக்கட்டத்தில் தரித்திரம் பிறருக்கு அவமானம், ஆபத்து, கெட்ட பெயர், நஷ்டம் தரும். உயிருக்கு ஆபத்தானது தரித்திரம்.

**எவருக்கும் அசிங்கம் கொண்டுவரும் தரித்திரம் தான் அசிங்கத்தைத் தடுப்பேன் எனப் பேசும்.**

கணவர் சரணாகதியை ஏற்றுத் திருவுருமாறினால் அதிர்ஷ்டமானவர் ஆவார். திருமணச் சட்டப்படி எதிரானவர் மணப்பர். அதனால் ஆரம்பத்தில் தாயார், கணவருக்காகத் தாம் திருவுருமாற முயன்றால், கணவர் பிறகு திருவுருமாறும் சந்தர்ப்பம் எழும்.

**கயமைக்கு 30, 40 குணங்களுண்டு. அத்தனையும் தரித்திரத்திற்குண்டு.**

கணவருக்கு அத்தனை தரித்திரமான குணங்களும் உண்டு.

- ✡ கணவரைத் தம் சாதனையாக எடுத்துக்கொள்வது தாயார் கடமை.
- ✡ கணவர் குணத்திற்காக வருத்தப்பட்டால் அவர் குணம் வளரும்.
- ✡ அதிலிருந்து ஒதுங்கினால் கணவர் குணம் தொந்தரவு தாராது; ஆனால் மாறாது.
- ✡ கணவர் குணம் தம் குணத்தின் பிரதிபலிப்பு* என ஏற்றால் கணவர் திருவுருமாறலாம்.
- ✡ கணவர் கயமையான குணத்தை ஆர்வமாக வெளிப்படுத்துவது அவருக்குச் சரிஎன ஏற்பது தாயாருக்குச் சரணாகதி மனப்பான்மையாகும்.
- ✡ கணவர் மனைவியைத் தரித்திரம் என்றும் ஒரு சமயம் பேசுவார். அப்படிப் பேசும்பொழுது தான் - தரித்திரம் - கணவர் என்ற உரிமையைக் கொண்டாடுகிறார்எனக் கொள்ளவேண்டும்.
- ✡ தாயார் எதையும் செய்யலாம், வருத்தப்பட அவருக்கு உரிமை இல்லை.
- ✡ கணவர் அருளைப் பற்றிப் பேசுபவற்றை தாம் அன்னையைப் பற்றி கருதுவதாகக் கொண்டால், சரிவரும். உதாரணமாக,
  - ❀ ஏன் அன்னை பலிக்கவில்லைஎன தாம் கேட்கும்பொழுது ஏன் தான் அருளை ஏற்கவில்லைஎன கேட்க மறந்துவிட்டது தெரியும்.
  - ❀ எப்படி அருளைத் தான் தவறவிட்டேன் என்பதை தாம் அறியும்வரை கணவரிடமிருந்து இக்கேள்விகள் எழுந்ததும், அருளைப் பெற்றபின் அக்கேள்விகள் மறைந்ததையும் அவர் நினைவுகூர்ந்தார்.

---

* மூன்று வகையான பிரதிபலிப்பை 'எங்கள் குடும்பம்' பக்கம் 459இல் காணலாம்.



- ❀ கணவனை ஏற்பது என்றால் கயமையை உளமார ஏற்பதாகும். கயமையும் பகுதி, அதிர்ஷ்டமும் பகுதி. இரண்டும் சேர்ந்த முழுமை அருள்.
- ❀ பகுதியான தம் அதிர்ஷ்டம் முழுமையான அருளாக, கணவரின் அடுத்த பகுதியான கயமையை ஏற்கவேண்டும் என்பது திருவுருமாற்றத் தத்துவம்.
- ❀ அதிர்ஷ்டம் கயமையைத் தனக்குரிய அடுத்த பகுதியாக complement ஏற்பதும், அகங்காரமாகவோ, அடக்கமாகவோ ஏற்கலாம்.
- ❀ பலன் அடக்கத்திற்குத்தானுண்டு. அகங்காரத்திற்கு எதிரான பலன் கிடைக்கும்.

- ✡ இதன் அடிப்படைத் தத்துவம் எறும்புப் புற்றும், சூரிய மண்டலமும் ஒன்று என்பது. மௌனமும், சலனமும் ஒன்று என்பது.

*கயமையும், அதிர்ஷ்டமும் ஒன்று*

என்ற பிரம்மஞானம் அடிப்படை. கயமை மட்டம், அதிர்ஷ்டம் உயர்ந்தது என்பது அகந்தைஞானம்.

- ✡ மனைவி என்றும் கணவனுக்கு அடங்கியிருப்பது நல்லது. அதற்குப் பெரிய பலனிருக்காது. கணவர் கயமை என்ற அடுத்த பகுதியை என் அதிர்ஷ்டத்தைப் பூர்த்திசெய்யக் கொண்டுவந்தவர் என்ற அடக்கவுணர்வுக்குப் பெரும்பலன் உண்டு.
  - ❀ மனைவி என்ற அடக்கம் சமூகத்திற்குரியது.
  - ❀ கணவரும் தாமும் முரண்பாடான உடன்பாடு என்பது பிரம்மஞானத்திற்குரிய அடக்கம்.
- ✡ தாயாருக்குத் தத்துவம் புரிந்தாலும், தம் வாழ்வில் தத்துவம் வெளிப்படும் ரூபம் புரியாது. இக்கருத்துகளைப் பொதுவாகப் புரிவதில் பொதுவான பலனும், குறிப்பாக ஒவ்வொரு செயலிலும் புரிவது

**குறிப்பான பலனும் தரும். 12 இலட்ச வியாபாரத்தின்பொழுது கொடுத்த 150 ரூபாய் காணிக்கை 5½ கோடி வியாபாரம் நடக்கும்பொழுது மாற்றாவிட்டாலும், செய்த சேவை பலன் தந்துவிட்டது. கருமித்தனம் தாராளமானால் வந்த 50 கோடி வாய்ப்பு தடையின்றிப் பலித்து, வளரும். சேவை பொதுவானது, காணிக்கை குறிப்பானது. பிறர் எடுத்துச்சொல்லி செய்வதில்லை இது. தானே உணர்ந்து பலன் பெறவேண்டியது.**

✡ **குடும்பம் செய்து பலன் பெறுகிறதா என்பதைவிட குடும்பம் என்ன செய்து, எப்பொழுது செய்து, எந்தப் பலன் பெறவேண்டும்எனத் தாயார் அறிவது பிரம்மஜனனத்திற்குரிய பிரம்மஞானம்.**

முதற்பகுதி நிகழ்ச்சிகளெல்லாம் இப்படி இப்பகுதியில் விவரிக்கப்பட வேண்டியது, எந்த அளவு விவரமாக விளக்க முடியுமோ, அந்த அளவு எழுத முயல்கிறேன். படிப்பது பலன் தாராது; செய்வது பலன் தரும். படித்தால் புரியும்; புரிவது புரியும் பலன். பலன் பல நிலைகளிலுள்ளது.

✡ **பொருளாக (பணமாக) வரும் பலன் முதல் நிலைக்குரிய சிறிய பலன்.**

✡ **ஏன் அப்பலன் வந்தது என்பது அறிவு; பலனைவிடப் பெரியது.**

✡ **எந்தத் தத்துவம் இப்பலனாக வெளிப்படுகிறது என்பது அறிவைக்கடந்த ஞானம்.**

✡ **இப்பலன் எப்படி மற்ற விஷயங்களில் வெளிப்படும் என்பது பூரணஞானம்.**

✡ **பூரணஞானத்தின் சுபாவத்திற்குரிய ரூபம் பூரணயோகஞானம்.**

✡ **முடிவானது யோகசித்தி.**

## தவறான செய்தியை நம்புபவர்

இந்தக் குடும்பத்திற்கு இவ்வளவு பெரிய வாய்ப்புகள் வந்தன என்பதில் ஒரு பேருண்மையுண்டு. **உள்ளத்தில் உண்மையிருந்தால்**



**ஆண்டவன் நம்மை அதிர்ஷ்டமாகத் தேடி வருவான்.** பெரும்பாலும் நம் உள்ளத்தின் உண்மை நமக்குத் தெரியும். ஆனால் ஊரில் உலவும் செய்தி ஒன்றில் இருதரத்தார் எதிரெதிரான விவரங்களைக் கூறினால் புதிய மனிதர் எதை நம்புவது? அதில் ஆன்மீக உண்மையொன்றுண்டு.

*எவர் எதை நம்புகிறாரோ, அவர் அதற்குரியவராவார்.*

அன்பருக்கு அது ஒரு பிரச்சினையானால், சமர்ப்பணம் பிரச்சினையைத் தீர்க்கும். சமர்ப்பணத்தை நாடாதவர், உண்மையை நம்பினால் உண்மையானவராக இருப்பார். பொய்யை நம்புபவர் பொய்யான உள்ளம் உடையவராக இருப்பார். விலக்கில்லாத விதிகளில் இதுவும் ஒன்று. தாயாரால் பொய்யான செய்தியை நம்ப முடியாது என்பதால் இப்பெருங்காரியங்கள் அவர் வாழ்வில் நடந்தன.

சுமார் இலட்சத்திற்கு மேற்பட்ட கடிதங்கள் எனக்கு வந்துள்ளன. படித்து, நல்ல பெரிய தொழிலில் உள்ளவர் ஒருவர் என் கட்டுரைகளைப் படித்துவிட்டு கடிதம் எழுதினார். கடிதம் விவரமானது. கட்டுரையின் நுணுக்கம், சூட்சுமத்தை அறிந்து, பாராட்டி எழுதியிருந்தார். இதுவரை நான் பெற்ற கடிதங்களில் ஆன்மவிழிப்பு, அர்த்தபுஷ்டி, இனிய மனநிலை, அனுபவச் சிறப்பு, நல்லெண்ணம் ஆகியவற்றுள் சிறந்து விளங்கிய கடிதம் அவருடையது. அவர் அதிலிருந்து தினமும் எனக்குக் கடிதம் எழுதுவார். ஈ-மெயில்மூலம் வருவதால் அன்றே பதில் எழுதுவேன். Luck புத்தகம் படித்துவிட்டு, கீழே வைக்க முடியவில்லைஎன எழுதியிருந்தார். சுமார் 10 கட்டுரைகளை அவருக்கு ஈ-மெயில்மூலம் அனுப்பினேன்; பதிலில்லை. அதன்பிறகு நெடுநாட்களாக பதிலேயில்லை; தொடர்பு அறுபட்டது. வேறு சந்தர்ப்பங்களால் கடிதம் எழுதவில்லை என்றால், செய்தியாவது வந்திருக்கும். காரணம் தெரியாததால், காரணத்தை நாமே கற்பிக்கக் கூடாது. விருப்பமான தொடர்பை வேண்டுமென்றே விலக்கியதான தோற்றம். செய்தி தெரியாததால் சிந்தனைக்கு வேலையில்லை. சில மாதங்கள் கழித்து, அவர் வந்திருக்கிறார். அவருடைய கடிதங்களைப்

பெற்றுப் பதில் அனுப்புபவர் அன்று வீட்டிலில்லை. அவர் ஒருவரைத் தவிர வேறு எவருக்கும் இந்த அன்பரைப் பற்றித் தெரியாது. வந்தவர் இனிமையாகப் பேசியிருக்கிறார். கடுமையாகப் பதில் வந்திருக்கிறது. கடுமையாகப் பதில் சொல்லியவர் தாம் கடுமையாகப் பேசுகிறோம் என்றும் அறியாதவர். அடுத்தவர் ஒருவரைச் சந்தித்திருக்கிறார். அவர் அன்பர் சொல்வது எதையும் நம்பவில்லை. வந்தவர் திரும்பப் போய்விட்டார். ஆரம்பத்தில் இவ்வன்பர் என்னைச் சந்திக்க விரும்பியபொழுது, “நான் அன்பர்களை இப்பொழுது சந்திப்பதில்லை. நீங்கள் சாதிக்கக்கூடியவர். சாதித்தால் நான் உங்களைச் சந்திக்கிறேன். வருமானம் 10 மடங்கு உயர்வது ஒரு சாதனை” என்றெழுதியிருந்தேன்.

இனிய அன்பருக்கு (rude) கடுமையான வரவேற்பு தவறு. அவர் நம்பிக்கைக்குரியவரில்லைஎனச் சந்தேகப்படுவது தவறு. மன்னிக்க முடியாத பழக்கம். இந்த வரவேற்பு நான் ஏற்கக்கூடியதில்லை; அனுமதிக்கக் கூடியதில்லை; பேச, பழகத் தெரியாதவர்கட்குப் பேசக் கற்றுக்கொடுக்க முடியாது. அன்பருக்கு அளித்த வரவேற்பு கண்டிக்கக் கூடியது. நான் இதுபோன்ற காரியங்களில் எவரையும் கண்டிப்பதில்லை என்பதுடன், கேட்பதுமில்லை. இதற்கு மேற்பட்ட ஆன்மீக உண்மை ஒன்றுண்டு. “**நமக்குக் கிடைக்கும் வரவேற்பு நம் மனத்தைப் பொருத்தது; செயலைப் பொருத்ததன்று**”. வரவேற்பு கடுமையானது என்றால் மனம் கடுமையாக இருப்பதாக அர்த்தம். சூட்சுமத்தில் மனத்தில் கடுமை எழுந்தால், நடைமுறையில் கடுமை எழும்.

இக்குடும்பத்தில் தாயாருக்குச் செய்திகள் வந்தால், எதையும் லேசாக நம்பமாட்டார். செய்தி வதந்தியாக இருக்கும், அக்கப்போராக இருக்கும், குபார், புகாராகவுமிருக்கும். தெளிவாகத் தெரியாமல் எதையும் தாயார் நம்பாததால், அவர் தவற்றை நம்பும் சந்தர்ப்பத்தை அறவே தவிர்த்தார். அதுவே அவருக்குப் பெரிய நல்லது நடக்கக் காரணமாயிற்று.

✡ **உண்மையான மனம் உண்மையை நம்பும்,**



✡ **தவறான மனம் பொய்யை நம்பும்**

என்ற விதி தாயார் கடைப்பிடிப்பது.

வதந்தி கம்பியில்லாத் தந்தி. எந்த அளவு வதந்தி பொய்யாக வளரும் என்பது அது எழுந்து, பிறகு உண்மை வந்தபிறகுதான் தெரியும். பத்திரிக்கைகள் செய்யும் பெரிய சேவை வதந்திக்குத் தடை செய்வது. 1965இல் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பத்திரிக்கைகள் வருவது நின்றபொழுது, நெய்வேலியில் 19 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்; விழுப்புரத்தில் துப்பாக்கிக்கு 12 பேர் பலி என்று செய்தி வந்தது. பத்திரிக்கைகள் மீண்டும் வந்தபொழுது அவை வதந்திஎனவும், நெய்வேலி, விழுப்புரத்தில் எதிர்ப்புப் போராட்டமே நடக்கவில்லைஎனவும் தெரியவந்தது.

60 ஆண்டுகள் நிரம்பிய கல்விக்கூடத்தில் பொறுக்க முடியாத புகார். பேராசிரியர்கள் செய்தி கேட்டு, அதிர்ந்தனர். “இப்படி கொள்ளை நடப்பதை உடனே அம்பலப்படுத்த வேண்டும்; தடுக்க வேண்டும்” என்று கூடி சங்கல்பம் செய்தனர். 100க்கு மேலான பேராசிரியர்களிடையே ஒருமனதான அபிப்பிராயம், “500 கோடி ரூபாயை ஸ்தாபகர் கொள்ளை அடித்துவிட்டார்” என்ற செய்தி ஸ்தாபனத்தைக் கலக்கியது. அதன் ஆரம்ப நாட்களில் வருஷ பட்ஜெட் 10 இலட்ச ரூபாய். பிரச்சினை எழுந்த வருஷம் 10 கோடி ரூபாய். 60 ஆண்டு பட்ஜெட்டைக் கூட்டிப்பார்த்தபொழுது, 60 ஆண்டு மொத்த செலாவணி 50 கோடி ரூபாய். 500 கோடி கொள்ளை போனதாக அதிகம் படித்தவர் பேசுவது வதந்தியின் தன்மை. அதுவே வதந்தியின் உண்மை.

✡ **வதந்தியை நம்புபவர் வதந்தியின் மனநிலைக்குரியவர்.**

✡ **'நான் தெரியாமல் நம்பினேன்' என்றாலும், உள்மனம் அப்பொய்யை விரும்பி ஏற்கிறதுஎனப் பொருள்.**

✡ **நல்லவர்மீது எழும் புகாரை நம்புவது rudeness சூட்சுமத்தில் கடுமையாகும்.**

✡ **Life Response சட்டப்படி சூட்சுமத்தில் கடுமையுடையவர்க்கு நடைமுறையில் physical life கடுமையான வரவேற்பு கிடைக்கும்.**

✡ **விலக்கில்லாத இவ்விதியை நொந்துகொள்வது பயன் தாராது.**

✡ **நாம் சந்திக்கும் விஷயங்கள், நபர்கள், நம் ஆழ்மனத்தைப் பிரதிபலிப்பதை ஏற்கும் பொறுமை அவசியம்.**

✡ **வதந்திக்கும் பயனுண்டு. அது செய்வதும் சேவை என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

✡ **வதந்தி பொய்யின் மலைபோன்ற உருவம். ஒருவர் அதை நம்புகிறார் எனில், அவர் மனம் மலைபோன்ற பொய்யின் மனிதப்பிறப்பு என்றாகும்.**

✡ **அவ்வுண்மையை நாமறிய வதந்தி உதவுகிறது.**

✡ **வதந்தி செய்யும் சேவையை சத்தியம் செய்ய முடியாது.**

✡ **ஒருவர் மனத்தின் உண்மையை அறியும் அளவுகோல் வதந்தி.**

✡ **வதந்திக்குப் பலியாகுபவர் அன்னைஅன்பராக முடியாது.**

கம்பனி பார்ட்னர்ஷிப் வந்தது போய்விட்டது, திரும்பிவந்தது. இதனுள் ஏதாவது தத்துவம் உண்டா? தத்தளிக்கும் உயிர் தப்பித்துக்கொண்டபின், உடலைவிட்டுப் போனால், திரும்ப வாராது; கிடைக்காத வேலை கிடைத்தது தவறினால், மீண்டும் எளிதில் பெறமுடியாது; பெறுவது அரிது. உடல் ஜடம்; அதனால், போனால் வாராது. வேலை vital உயிரைச் சேர்ந்தது; போனால் வரமுடியும், ஆனால் அரிது. வாய்ப்பு பெரியதானால், தவறியது மீண்டும் கிடைக்காது. சிறியதானால் ஒருவேளை கிடைக்கலாம். இக்குடும்பத்திற்கு வந்தது பெரிய வாய்ப்பு; தவறியது, மீண்டும் வந்தது.

✡ **வாய்ப்பு என்பது சூழல் கனத்து, செறிந்து, அந்த உபரியால் எழுவது.**



✡ **ஒரு சமூகத்தில் வாய்ப்புகள் உள்ளன என்றால், சமூகம் வளர்கிறது என்று அர்த்தம்.**

✡ **அன்பருடைய வாழ்வில் திரைமறைவில் ஆத்மா அசைந்து வளர ஆரம்பிப்பதால், அன்பருக்கு வாய்ப்புகள் எழுகின்றன.**

✡ **The unorganised excess favouring the organised old structure is opportunity. புதியது பொங்கி எழுவதால், பழையது உபரியாகப் பெறுவது வாய்ப்பு.**

✡ **புதியதற்குப் போகும் திசையில்லை என்பதால், வந்து தவறியது மீண்டும் வர வழியில்லை.**

✡ **மீண்டும் வருகிறதுஎனில் அன்னை விழிப்புடன் செயல்படுகிறார் எனப் பொருள்.**

✡ **உபரி அளவுகடந்திருந்தாலும், அன்னைக்கு நம் நினைவிருந்தாலும் தவறியது மீண்டும் வரும்.**

✡ **அளவுகடந்து உபரி சக்தி இருக்க, நம் வாழ்வு மையத்தைவிட (vital or mental) உயர்ந்த நிலையில் (ஆத்மா, வளரும்ஆத்மா) சக்தி உற்பத்தியாக வேண்டும்.**

✡ **அன்னைக்கு நம்நினைவு வர, நமக்கு அன்னைநினைவு மட்டுமிருக்க வேண்டும்.**

✡ **தாயாருடைய நினைவால் முழுக்குடும்பமும் பலன் பெற வேண்டுமானால் சக்தி குறையும்.**

✡ **குடும்பத்தினர் அன்னைக்கு எதிரான பழக்கங்கள் உடையவராக இருப்பதால், வந்ததற்கு எந்த நேரமும் ஆபத்து. அது நிலைப்பது எதனால் என்பது தாயாருக்குப் பொதுவாகப் புரியும்; விவரமாகப் புரியாது. மற்றவர்க்கு அந்நினைவில்லை.**

✡ **மேலும் மேலும், பெரிய பெரிய வாய்ப்புகள் வருவதால், அவற்றைப் பெற்று அனுபவிக்கும் திறன் குடும்பத்திலில்லை.**

✡ வருவதே ஓரளவு பெறும் திறனையும் கொடுக்கும். அது மட்டுமே தற்சமயம் இருக்கின்றது; வேறெதுவுமில்லை.

✡ முதலில் கம்பனி வந்ததிலிருந்து கடைசிவரை இக்கண்ணோட்டத்துடன் நடந்த நிகழ்ச்சிகளை ஆராய்ந்தால், வீட்டினர் மனநிலைகளைக் கருதினால் வருவதற்கும், தத்தளிப்பதற்கும், இப்பொழுது நிலைத்து இருப்பதற்கும் உள்ள காரணம் புரியும்.

✡ முதலில் வந்ததைப் பாராட்டாததால் வந்தது போய்விட்டது.

✡ போனபிறகு அதன் அருமை தெரிந்ததால் மீண்டும் வந்தது.

✡ வந்தபின் அன்னையை ஏற்க வேண்டும்என வாயளவில் பேசியதால் வந்தது பெருகிற்று.

✡ பெரியது வந்தவுடன் அதைத் தாங்கும் சக்தியில்லாததால் சிறுசிறு சிரமங்கள் வந்தன.

✡ சிறு நிகழ்ச்சிகள் பெரிய ஆபத்தைக் கொண்டுவருவது அதற்குரிய அன்னைச்சூழலிருப்பதைக் காட்டுகிறது.

✡ வந்த ஆபத்து விலகுவது, வீட்டார் அடிப்படையில் கெட்ட சுபாவமுள்ளவரில்லைஎனக் காட்டுகிறது.

*தொடரும்.....*


புதிய வெளியீடு

**எங்கள் குடும்பம்**

**(பாகம் I)**

*by*

**கர்மயோகி**

விலை : ரூ.200/- தபால் செலவு : ரூ.20/-






**p.50 The earth is a brute mechanic accident.**

**பூவுலகம் முரட்டுத்தனத்தின் அசந்தர்ப்பம்.**

- ✡ *வாழ்வு மரணமெனும் வலையில் நாம் தற்செயலாய் பெற்ற வரம்.*
- ✡ *யாம் பெற்ற பெரியஞானம் சந்தேகத்தின் யூகம்.*
- ✡ *முடிவான சாதனை மூலத்திற்கு வகுத்த வழி.*
- ✡ *மூலத்தின் முடிவு ஊனக்கண்ணுக்கு எட்டாதது.*
- ✡ *தவறி நடந்தது; தவிர்க்கக்கூடிய தலைவிதி.*
- ✡ *அறியாமைமூலம் தெரியாததை நாடுகிறோம்.*
- ✡ *காலத்தின் துளியைச் சூழ்ந்துள்ள சூழல்.*
- ✡ *பதிலற்ற கேள்வியின் ஒளியற்ற நிழல்.*
- ✡ *இருண்ட ஜடத்தின் சுவடற்ற புதிர்.*
- ✡ *விதியின் கதிக்குப் பின்னால் நிற்கும் விவரமற்ற தெளிவு.*
- ✡ *இருளின் கடுமையில் எழும் ஆர்வம்.*
- ✡ *அழியும் உடலின்வித்து, அறியாமையின் அரைகுறை விளக்கம்.*
- ✡ *விழித்தெழும் கனவின் தனித்துறையும் நாக்கு.*
- ✡ *அழியாத ஜோதியை நாடும் தன்னையிழந்த எழுச்சி.*
- ✡ *தன் குரலின் எதிரொலியே தான் பெற்ற பேறு.*
- ✡ *மருண்ட இதயத்தின் மிரண்ட குரல்.*
- ✡ *ஏனென அறியாத இதயத்தின் இருண்ட இனிமை.*
- ✡ *காரணமற்ற கருமையின் கொடுமை.*
- ✡ *வாழ்வின் புதிருக்கு ஆண்டவன் அளித்த உத்தரவு.*
- ✡ *காலத்தில் பிறந்த அமரனின் புதிர்.*
- ✡ *பாம்பென எழுந்த யுகங்களின்பாதை.*
- ✡ *கறுத்து, சுருண்ட இருளின்பாதை.*
- ✡ *காலத்தின் துளிகளில் உழலும் பூமாதேவி.*
- ✡ *உள்ளுறைஜீவனை உணரும் நம்பிக்கை.*
- ✡ *செவிக்கெட்டாத சொல்லின்ஒலி.*
- ✡ *கடுமைப்படுத்தும் விதியின்கையைக் காண முடியவில்லை.*
- ✡ *சூன்யத்துள் செல்லும் மயங்கியநெறி.*
- ✡ *விளக்கமற்ற ஆழத்தைவிட்டு விரைந்தெழும் முயற்சி.*
- ✡ *தடுமாறும்வாழ்வின் தத்தளிக்கும்இன்பம்.*
- ✡ *சுட்டிக்காட்டும் எட்டாத அறிவு.*
- ✡ *அசைந்தெழுந்து நெளியும் சிருஷ்டி.*
- ✡ *ஒளியை மிஞ்சிய எண்ணத்தின் சொல்.*
- ✡ *ஆனந்தத்தை நாடும் பதட்டமான சந்தோஷம்.*
- ✡ *அழியும்அழகு, பணியும்பக்குவம்.*
- ✡ *கவலையின்எச்சரிக்கை காலைப் பின்னுகிறது.*

❀ ❀ ❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIII. The Divine Maya

Evolution is a phenomenal truth of the universe. **Page No.114**
It is modern. **Para No.5**
There is an ancient truth of Vedanta.
Thus the modern truth is received into the ancient truth.
It is so illumined.
Thus it is justified.
The key shows us all the meaning of the modern truth.
Evolution is a modern truth.
After all, it is the old truth.
The truth is the development of the Universe.
The Universe develops successively in Time.
We study Force and Matter.
Therefore the truth is seen opaquely.
The key helps us find its own full sense.
It is the justification.
The Vedanta are Scriptures.
They still preserve the old truth.
That truth is eternal.



## 13. தெய்வீக மாயை

பரிணாமம் என்பது பிரபஞ்சவளர்ச்சி.
இது புதியது.
பழைய வேதாந்தக் கருத்து ஒன்றுண்டு.
இப்புதிய கருத்து இப்புதிர்மூலம் வேதாந்தத்தை ஏற்கிறது.
புதியது பழையதால் பிரகாசிக்கிறது.
அதனால் இரண்டும் ஒன்றேஎனப் புரிகிறது.
இப்புதிய கருத்தின் சாரம் முழுவதும் இப்புதிரால் விளக்கப்படுகிறது.
பரிணாமம் புதியது.
என்றாலும் அக்கருத்து பழைய கருத்தே.
பிரபஞ்ச வளர்ச்சியே அவ்வுண்மை.
பிரபஞ்சம் காலத்துள் வளர்கிறது.
நாம் ஜடத்தையும், சக்தியையும் ஆராய்ச்சி செய்கிறோம்.
அதனால் உண்மை கலங்குகிறது.
இந்த இரகஸ்யம் முழு உண்மையை விளக்குகிறது.
புரியும் வகை இதுவே.
வேதாந்தம் நமது பொக்கிஷம்.
பழையசத்தியம் அதனுள் உள்ளது.
சத்தியம் நித்தியம்.

**It has Light.**
**That Light illuminates itself.**
**This is mutual self-discovery.**
**It is self-illumination.**
**The old truth is Eastern.**
**The new knowledge is Western.**
**The thought of the world is turning.**
**It is turning towards the fusion of the two.**

*Contd...*

*Contd...*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொதுமக்களிடமிருந்து எவ்வளவு விலகியிருக்கிறோமோ, அந்த அளவுக்கு நல்ல பெயர் கிடைக்கும்.

***நெருக்கமில்லாவிட்டால் நல்ல பெயர் கிடைக்கும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உயர்ந்த செயலையும் தாழ்ந்த மனநிலையுடன் மனிதன் பார்ப்பதால் அவை சிறியனவாகத் தோன்றும். தாழ்ந்த செயலையும் உயர்ந்த மனநிலையுடன் இறைவன் காண்பதால் அவை உயர்ந்து தோன்றும். உயர்ந்த நிலையிலிருந்து உலகத்தின் செயல்களைக் காண முயலும் மனிதன் தெய்வத்தை நோக்கிச் செல்கிறான்.

***தெய்வத்தை நோக்கிச் செல்லும் மனநிலை.***



**அது ஜோதிமயமானது.**
**ஜோதியால் ஜோதி பிரகாசிக்கிறது.**
**இரண்டும் ஒன்றையொன்று அறியும் முறை இது.**
**இது சுயம்பிரகாசம்.**
**பழையஉண்மை கீழண்டை நாடுகளைச் சேர்ந்தது.**
**புதியஞானம் மேல்நாட்டைச் சேர்ந்தது.**
**உலகம் இவ்வுண்மையை நாடுகிறது.**
**இரு உண்மைகளும் சேருவதை உலகம் எதிர்பார்க்கிறது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணம் அல்லது உணர்வைச் சரணம் செய்தால், தலையில் 'சில்' என இருப்பது சைத்தியம் எழுவது.

***சைத்தியம் 'சில்' என உணரும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன் இராசியை அறிந்து மாற்ற முன்வருவதை உண்மை (sincerity) எனலாம். தவிர்க்க முடியாத வேகத்தைத் தடுக்கும் கட்டுப்பாடுளனவும் அதைச் சொல்லலாம். முரண்பாடுகளைக் கண்டு அவற்றைத் தீர்க்க முயல்வதையும் உண்மை எனலாம்.

***இராசியை மாற்றுவதும், முரண்பாட்டை ஏற்பதுவும் sincerity ஆகும்.***

**The World of Delight is waiting,**
**not for us to be ready,**
**but for us to accept.**

**ஆனந்த லோகம் நமக்காகக் காத்திருக்கிறது,**
**நாம் தயாராக வேண்டியதில்லை,**
**ஏற்றுக்கொண்டால் போதும்.**

✡ **தன்னைத் தன்னுள் ஒளித்து மறந்த பிரம்மம், மறந்ததை நினைவுபடுத்துவது அருள். நினைவுபடுத்தாமல் மறந்தது வெளிவாராது.**

✡ **நினைவுபடுத்தி, வெளிவந்து, ஆனந்தம் அனுபவிப்பதையும் பிரம்மமே செய்வதில்லை.**

✡ **லீலைக்கு இடமளிக்க வேண்டியது அவசியம்.**

❀ *ஆசிரியர் மாணவனுக்குத் தரும் பயிற்சி, ஒர்க்ஷாப்பில் மெக்கானிக் புதுப்பையனுக்குத் தரும் பயிற்சி, டென்னீஸ்கோச் கொடுக்கும் பயிற்சி, பெரியவர்கள் குழந்தைக்குத் தரும் பயிற்சி, மேல்நாடுகள் இந்தியாவுக்குத் தரும் டெக்னாலஜி ஆகியவற்றுள் நாம் காண்பவை,*

✰ கொடுப்பவர் கொடுக்காவிட்டால், பெறுபவருக்கு ஒன்றுமில்லை.

✰ கொடுப்பவரே பயிற்சியைக் கொடுப்பதற்குப் பதிலாக பலனையும் கொடுத்துவிட்டால், பெறுபவர் எதையும் நிரந்தரமாகப் பெறமுடியாது. அது பயிற்சியாக இருக்காது. பெறுபவர் கடைசிவரை கொடுப்பவரை எதிர்பார்க்க வேண்டும்.



✡ **ஆன்மீக லோகத்தில் மனிதன் மோட்சம் பெறக் கற்றுக்கொண்டான்.**

✡ **தான் பெற்ற மோட்சத்தைப் பிறருக்குக் கொடுக்க முடியாது. பிறருக்கு அது வழிகாட்டியாக இருக்கும்.**

❀ *T.V. கண்டுபிடித்தவர், கண்டுபிடித்தது பெரிய இரகஸ்யம். அதை நம்போன்ற ஒருவருக்குக் கொடுத்தால், அதைப் பெற நமக்குத் தகுதியில்லை. நாம் ஒரு தொழிலதிபராகி, பாக்டரி வைத்து, அதன்பின் T.V. டெக்னாலஜியைப் பெறவேண்டும்.*

**T.V. டெக்னாலஜியைப் பெறத் தகுதி வேண்டும்;**
**நேரடியாகப் பெற முடியாது.**

❀ *அது T.V.யாக மார்க்கட்டில் விற்றால், நாம் எந்தத் தகுதியும் பெறாமல், T.V.யை வாங்கி, நேரடியாகப் பயன்படுத்தலாம்.*

❀ *அதை வாங்கும் தகுதியும், போட்டுப்பார்க்கும் தகுதியும் நாம் பெறவேண்டும்.*

✡ **மோட்சம் பெற்றவர், அடுத்தவருக்கு மோட்சம் தரமுடியாது; மோட்சம் பெறும் மார்க்கத்தைத் தரலாம். அவர் அதைப் பெற்று தவமிருந்து மோட்சம் பெறலாம்.**

✡ **மோட்சம் பகுதியானபிரம்மம் சமாதியில் பெறுவது. முழுமையான பிரம்மம் விழிப்பில் பெறுவது பூலோகச்சுவர்க்கம், ஆனந்த லோகம். அந்த ஆனந்தலோகம் நமக்காகக் காத்திருக்கிறது. நாம் அதைப் பெற நம்மைத் தயார் செய்வதும் அவசியமில்லை; ஏற்றுக்கொண்டால் போதும். ஏற்றுக்கொள்ளும் தகுதி தேவை.**

✡ **இது இறைவன் வரும் தருணம்என உலகுக்கு அறிவிக்க வந்தவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர். அவரை ஏற்பது அதிர்ஷ்டம், அருள்.**

❀❀❀

## நெஞ்சம் விம்மும் அன்னையைப் பற்றிய சிறு துளிகள்

M. மணிவேல்

சத்தியஜீவிய அன்னை தன்னை, நெஞ்சில் வைத்து,
நினைவுகொண்டால்,
நித்தியகருமம் நிலைபெறும், வெற்றியைக் கண்டிடலாம்;
சித்தத்தை வைத்து, சீராய் சமர்ப்பணம் செய்திட்டால்,
சத்தியமாய் வந்து, அன்னை கைகொடுப்பார்என்று,
கோவலூர் நல்லோன் சொல்லிய சொல்லை,
ஆவலாய் பற்றினேன், மனத்தில், பக்தியாய்க்கொண்டேன்.

அன்னை நீ, அன்னிய மண்ணில் தோன்றி,
இந்திய நாட்டில் நிலைத்திட்டாய்!
முன்னம் நீ, ஆத்மதரிசனம் கண்டாய்,
கிருஷ்ணதரிசனம் பெற்றாய்!

அவரே பகவான், ஸ்ரீ அரவிந்தர்எனக் கண்டாய்!
பொன்னே உன் திருமேனி, தரையைத் தொட,
தலையாலே வணங்கினாய்!
மௌனம் நிலைத்தது, மின்னென, பிரம்மம் சித்தித்தது!

அன்னே! மேலைநாட்டுப் பழக்கம் மீறி,
இந்திய ஆன்மீகம் ஆட்கொண்டதே!
என்னே! ஆச்சர்யம்! இந்த ஆன்மீக அற்புதச்சங்கமம்!



அன்னையே! உன் பொன்மலர் திருவடிக்கு, ஒரு விண்ணப்பம்;
என் குணக்குறை காணாது, கனிவாக ஒரு சொல்,
சொல்லுவாய் அம்மா!

அன்னை நீ, ஆதிபராசக்தி அல்லவா? அந்தமும் ஆதியுமாகி,
அண்டமெலாம் உனதாளுகை அல்லவா?
பந்தமும், பல்வினை சூழ் உலகில்,
நீ மானிட வடிவம் எடுத்ததென்ன? எடுத்ததென்ன?

❀❀❀

விந்தையாய் நீ கேட்ட காரணம், யாதாயின்,
சொல்லுவேன், மகனே! நீ கேளாய்!
முடிவிலா, துன்பமென, பேரிடர்களென, பிணிகளென, மரணமென,
நொந்து மடியும் மனிதனை, மீட்க வந்தேன்! மீட்க வந்தேன்!
முந்திய வல்வினை அழித்து,
சிந்தையுள் தெளிவுமாக்கி, மீட்க வந்தேன்!
சத்தியஜீவிய மனிதனாக, திருவுருமாற்றம் செய்திடவே வந்தேன்!
நித்தமும் அவன்பின் நிற்கின்றேன்! அந்தோ! அவன்!
சித்தம் மயங்கி, திரும்பிப் பார்க்க மறுக்கின்றான், மறுக்கின்றான்!
அகத்தை மறந்து, புறத்தைப் போற்றி, தேடித் தேடி ஓடுகின்றான்!

பகவான் ஸ்ரீ அரவிந்தர், சூட்சும உலகில், யோகத்தில் ஆழ்ந்துள்ளார்!
வெகுவாய் மனிதனை, திருவுருமாற்றம் செய்திடவே முனைகின்றார்!
என்றோ ஒரு நாள், சத்தியஜீவன் பிறப்பான், மகனே!
அன்றே உலகில், துன்பமும் மரணமும் அழியும் மகனே! நீ அறிவாய்!

❀❀❀

நன்றி அன்னையே! தெளிந்தது மனம், புரிந்தது விளக்கம்!
மாறிவரும் உலகம், வெகுவாய், மாற்றம் பல கண்டதன்றோ!

முதன் முதலாய் மனிதன், ரயிலைப் பார்த்தான்,

அதை அவன் வீழ்ந்து கும்பிட்டான்;
மதயானை வாழும், காட்டுமனிதன்,
இதமான ரேடியோவைக் கண்டான்.
அதில், மனிதன் எங்கேஎன்று, உற்றுஉற்றுப் பார்த்தான்!
காலம் சுருங்கி, காரும் வந்தது, கட்டை வண்டியும் மறைந்தது.
வானத்துப் பறவை பார்த்த மனிதன்,
விண்ணில் விமானம் செலுத்தினான்!
தொலைதூரத் தொடர்புகொள்ள, தொலைபேசி வந்தது!
உலவும்போதும், ஊர்ப்பயணம்போதும், நிற்கின்றபோதும்,
செல்லுகின்றபோதும், சொகுசாய் பேசிட, செல்போன் வந்தது!
நேற்றையச் சமூகம் காணாத வசதி,
இன்றைய மனிதன் பெறுகின்றான்!
மாற்றம் உடையது பரிணாமம், அதுவே படைப்பின் ரகசியம்!
சத்தியஜீவன் வருவான், அதுவே அன்னைவாக்கு! சத்தியவாக்கு!
ஐயம் போக்கிய அன்னை நீ! அன்புடன் காக்கும் அன்னை நீ!
உன் செவ்விய பாதம் பணிந்து வணங்குகின்றேன்!

புண்ணியபூமி புதுவை போவாய், என இறைவன் குரல் கேட்டே,
திண்ணியமாய் வந்தார், பகவான் ஸ்ரீ அரவிந்தர்;
அலைகடலோரம் அமர்ந்திட்டார்!
எண்ணில் சாதகர், பூரணயோகம் பயின்றிடவே,
அமைத்திட்டார் ஆசிரமத்தை!

அன்னை வந்தார்! அங்கே, ஆன்மீகம் மலர்ந்தது!
ஆசிரமமும் வளர்ந்தது!
பொன் மகள் வாசமோ? கலைமகள் வாசமோ? ஆங்கே,
அன்னைஒளியுடன், சாந்தியும் நிலவியதே! என்னே இறைமாட்சி!

அன்னைக் கட்டுப்பாடு, கசப்பென உணர்ந்தோருண்டு!
அது, சாதனைக்கு இட்டுச்செல்லும், நல்வழிப்பாதையென அறிந்திலர்!
கட்டுப்பாட்டை ஏற்றவர், அருளைப் பெற்றிட்டார்!
ஈதென்ன கட்டுப்பாடு என்றவர் சொல்லாமல் விலகிப்போனார்!

குடதிசை ஏகினார் அன்னை! அருள்நகர்தன்னை நோக்கி,



படர்திசைதோறும் பரவியதே, அன்னை(யின்)ஒளிச்சூழல்!
நன்மையும், செல்வமும், நலமுடன் வழங்கிட,
அருள்மழை பொழியுதங்கே! அருள்மழை பொழியுதங்கே!

“எங்கள் குடும்பம்” செய்தியை சற்றே காண்போமா?
சிந்தையில் எண்ணி மகிழ்ந்திட, தெளிவானதோர் செய்தி!
விரிவானது! புரியும் விளக்கங்கள், பல கொண்டது, எளிதானது!
“லைப் டிவைனை” புரிய வைப்பது!

சிந்தையில் செம்மையாய், சினந்தனை தணிந்தார்க்கு,
பாவமும், தீமையும் சிதைந்து தொலைந்திடுமே!
கொடுமையும், கடுமையும்,
அன்னை(யின்)கருணைமுன் கரைந்திடுமே!

போட்டி, பொறாமை, பொய்யின் அரசாட்சி!
வாய்மையும், தூய்மையும், மெய்ம்மையின் மனசாட்சி!

மனிதன் வினோதமானவன்; அவன் உணர்வால் செயல்படுபவன்;
எதிரியை வீழ்த்தி, அழித்திட முனைந்திடுவான்!

கொட்டமடிக்கும் அகங்காரம், கொதித்துஎழும் கோபம்,
கொக்கரிக்கும் ஆணவமும், கூடிஇருக்கும் இடம்தேடி,
வரமாட்டார் அன்னை! அங்கே நாடி வரமாட்டார்!

அன்னை(யின்)சட்டம், தீமைக்குப் புறம்பானது,
அது முரணானது என, அறிந்திடாத மனிதன்,
கறைபட்ட மனத்தினால், குறை கூறும் இயல்பினன்!

அன்னைஅருள், செயல்படவில்லையேஎன அரற்றுவான்,
அவன் பிதற்றுவான், பேதமையால்!
உவகையால் உள்ளங்கனிந்து, உண்மையாய் அன்னையை ஏற்றவர்,
எவ்வகைத் துயருமின்றி, இன்பமுடன் நீடு வாழ்வார், உலகினில்!

வாய்ப்பு வந்தபோது, “வாய்ப்பே அன்னை!” என்று ஏற்றவர்,

வாய்ப்பின் வரவேற்பை, சமர்ப்பணம் செய்திட்டால்,
மனத்திலே சமர்ப்பணம் கைகூடும்,
ஜீவன் அங்கே சரணாகதியில் நிலைத்திடும்!

சரணாகதியுடன் சமர்ப்பணமும், சேரும் நேரம்,
அன்னை வரும் தருணம்! அது,
அதிர்ஷ்டம் வரும் நேரம்! வாய்ப்பை இழந்தால்
அங்கே வாழ்வு சுருங்கும்!

முன்னுக்கு வரும் குடும்பம், அருளால் வந்ததென உணர்ந்தால்,
நன்றியுடன் அன்னையை நினைத்திட்டால்,
நித்தமும் அவர் பெறுவது பேரருளாகும்!

பகவான் தருவது, உலகில் இல்லாதது!
அது, பெரும்பலனைத் தரவல்லது!
அந்தப் பங்கை, பகவானே ஏற்றால் என்ன?
என்று கேட்டான் அகந்தை மனிதன்!

இதனை அறிந்தார் அன்னை!
மனிதனால் முடியாதென முன்வந்தார்!
தானே செயல்பட்டார்! யோகத்தில் பகவானைக் கடந்துசென்றார்!
சூட்சுமஉலகில் பகவானை, சந்தித்தார் அனுதினமும்!
அவரது யோகம் வெற்றிபெற, உதவினார் அன்னை!
அங்கே, சூட்சும லோகத்தில்!

இந்த யோகம் பெறமுடியாதெனின், அதைக் கொண்டுவர,
ஆர்வமாய் முன்வரவேண்டுமன்றோ!
அதை அவரிடமே கேட்பது சரிதானா?
நமக்கு அது "பலிக்காதென்று" உணர்த்துவதே அதன் நோக்கம்!

உள்ளே உறைபவர் எவரோ, அவரே ஜகத்குரு!
அவரே அன்னை! ஸ்ரீ அரவிந்தர் என்றறிவோம்!

பூரணமானவர், அகமும், புறமும் அறிந்தவர்,



"எங்கள் குடும்பம்" தாயார்!
பிரச்சினையொன்று உருவானால், உரை சொல்லுவார்,
அவர் வழி சொல்லுவார்!

குறையொன்றுமில்லாக் குணமுடையார்! அவர்,
குடும்பக் கட்டுக்கோப்புத் தலைவி ஆவார்!
அவரது உரையினைக் கேட்போர்,
"திருவுருமாற்றம்" நாடுவார், திடமாக!
"பார்ட்னர்" பண்பைப் போற்றி,
பலரும் உயர்ந்திட விழைவார், விரைவாக!

இன்னும் பல உள, "எங்கள் குடும்பம்" செய்தி,
என்னால் விளம்பிட முடியுமோ "அன்னை வாழ்வு"?
**"கொடுப்பது அன்னை! பலிப்பது நம் பவித்திரம்"**

*அன்னவர் எம் குருவே என்று,*
*அவரது இணையடி போற்றி,*
*தொழுதேத்தினேன்!*
*-ஓம்-*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எதிரெதிரானவை (ஒளி - இருள்; உயர்வு - தாழ்வு) வாழ்க்கைக்கு ஆழ்ந்த உற்சாகத்தைக் கொடுக்கும். வெறுப்பவன் வெறுப்பின் எல்லைவரை செல்வான். வாழ்வின் தாழ்ந்த ருசியைக் கடந்தவனே இம்முரண்பாட்டைக் கடந்தவனாவான்.

***முரண்பாட்டைக் கடந்த உயர்ந்த ருசி.***

**Submission to the higher is the basis of the freedom of the lower.**

**சிறியது சுதந்திரம் பெற பெரியதற்குப் பணியவேண்டும்.**

✡ சுதந்திரம் என்பது தடைகளை விலக்குவது.

✡ பூரணசுதந்திரம் என்றால் தடைகள், அளவுகள், எல்லை, பூரணமாக இல்லாமலிருப்பது - பூரணசுதந்திரம் ஆனந்தமாகும்.

- ❀ தடையிருந்தால் அனுபவிக்கமுடியாது.
- ❀ சமூகம் தடைசெய்யும்.
- ❀ குடும்பம் தடைசெய்யும்.
- ❀ மனச்சாட்சி தடைசெய்யும்.
- ❀ தர்ம நியாயம் தடைசெய்யும்.
- ❀ தடைஎன ஒன்றில்லாவிட்டால் அனுபவிக்கமுடிவில்லை. முடிவில்லாத அனுபவம் ஆனந்தம்.
- ❀ அகமான ஆனந்தம் புறமான அனந்தம். அனந்தம் அந்தமில்லாதது, முடிவற்றது.

✡ பெரியது என்பது பகுதி, சிறியது என்பதும் பகுதி.

- ❀ இரண்டும் சேர்ந்தது முழுமை.
- ❀ சிறியது முழுமைபெற பெரியதுடன் இணையவேண்டும்.
- ❀ பணிவு, சிறியது பெரியதற்குப் பகுதியாவது.
- ❀ பெரியது சிறியதற்குப் பகுதியாக, ஆட்சி செலுத்தவேண்டும்.
- ❀ அதுவே, பெரியது சிறியதுடன் சேர்ந்து முழுமை பெறுவதாகும்.
- ❀ சிறியதற்குப் பணிவும், பெரியதற்கு ஆட்சியும் (domination) முழுமைபெறும் வழிகளாகும்.



- ❀ அடக்கம் அனைத்தையும் தன்னுட்கொள்ளும்.

✡ மனிதன் இறைவனை நான்கு அம்சங்களாகத் தேடுகிறான்.

- ❀ இறைவன், ஜோதி, சுதந்திரம், சாகாவரம் ஆகியவை அவ்வம்சங்கள்.
- ❀ ஜீவனில் இறைவன், மனத்துள் ஜோதியாகவும், உணர்வில் சுதந்திரமாகவும், உடலில் அமரத்துவமாகவும் உள்ளான்.
- ❀ ஞானயோகம் ஜோதியை நாடுகிறது.
- ❀ பக்தியோகம் சுதந்திரமான ஆனந்தத்தை நாடுகிறது.
- ❀ ஹடயோகம் உடல் காயகல்பம் பெற முயல்கிறது.
- ❀ காயகல்பம் பெறும் வழிகள் ஆசனம், பிராணயாமம்.
- ❀ ஆனந்தம் பெறும் வழி பணிவு.
- ❀ ஜோதியை அடையத் தேவைப்படுவது தியானம்.
- ❀ இறைவனையடைய வழிசெய்வது இரண்டறக்கலப்பது.

✡ பூரணயோகம் இவற்றையே முழுமையாக நாடுகிறது.

- ❀ பூதவுடல் நிலையாக வாழ்வது காயகல்பம். உடல் பொன்மயமாகி வாழ்வுக்கு அமரத்துவம் அளிப்பது பூரணயோக ஜோதி. அது பொன்னொளி.
- ❀ முழுஆட்சி செலுத்த பூரணயோகம் முழுப்பணிவை நாடுகிறது.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மாவில் சமத்துவம் கடைசி நிலை. எதற்கும் நிலையிழக்காத, எரிச்சல்பட முடியாத நிலை அது.

# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**841) வாழ்வின் ஒவ்வொரு நிலைக்கும் அதற்குரிய கட்டுப்பாடுகள், அனுபவிக்கக்கூடிய சந்தோஷங்களுண்டு. எவருக்கும் அது பயன் தரப் போவதில்லை. அடுத்த உயர்ந்த நிலைக்குரிய கட்டுப்பாட்டை நினைத்து, தன்நிலையில் அவற்றை அறிவில்லாமல் பின்பற்ற முயலும் அறிவீனம் மனிதனுக்குண்டு. குழந்தை விளையாடவேண்டும். குடும்பஸ்தன் தான் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்க வேண்டும்.**

*உரிய இன்பத்தைக் குறைவற ஏற்பது நல்லது.*

படிக்கும் மாணவன் விளையாடக்கூடாது என்ற கருத்து நிலவிய நாட்களுண்டு. ஊரில் பெரிய அந்தஸ்தில் வாழ்பவர் பொதுவாக வெளியில் போவது மரியாதையில்லை என்பது பழைய கருத்து; இன்றும் சில இடங்களில் உண்டு. பெண்கள் பாடுவது சரியில்லை, நடனமாடுவது பெரிய தவறு என்பவை 50 ஆண்டுகட்கு முன்னிருந்த கருத்து. பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்வது குற்றம்என்றும் கருதப்பட்டது. இவை சமூகநம்பிக்கைகள். இவற்றுள் உண்மை ஏதேனும் உண்டா? இருந்தால் அது என்ன? மாணவன் ஆசிரியரை எதிர்த்துப் பேசக்கூடாது என்பது, ஆசிரியரிடம் ஐயம் கேட்கக்கூடாதுஎன்று நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டது.

- ✡ **உலகம் இன்பத்திற்காக ஏற்பட்டது.**
- ✡ **துன்பம், தவறு, குற்றம் என்பவை அகந்தைக்கே; ஆத்மாவிற்கன்று.**
- ✡ **அகந்தையினின்று செயல்படாவிட்டால், எந்தச் செயலும் ஆனந்தம் தரும்; அதில் குற்றம் வாராது.**



- ✡ **நல்ல எண்ணம் நாளடைவில் தலைகீழேமாறி கெட்ட செயலாவதுண்டு.**
- ✡ **நம் நிலைக்கு மேற்பட்ட பழக்கம் நமக்கு தண்டனையாக அமையும்.**
- ✡ **நம் நிலைக்குக் கீழ்பட்ட பழக்கம் நம்மை கேலிக்குரியதாக்கும்.**
- ✡ **எந்த நிலைக்கும் உரிய ஆனந்தம் ஆயிரம் வகை; அதை முழுவதும் அனுபவிப்பது முறை.**
- ✡ **இருக்கிறது என்பதால் அளவுகடந்து அனுபவிப்பது தவறு என்ற கருத்து தடம்புரண்டு தண்டனையாவதுண்டு.**
- ✡ **அர்த்தமற்றவன் அர்த்தமுள்ளதை அர்த்தமற்றதாக்குவான்.**
- ✡ **அர்த்தமுள்ளவனுக்கு எந்தக் காரியமும் அர்த்தமற்றதாகாது.**
- ✡ **கற்பனை உலகில் இலட்சியத்தை எழுப்பி, நடைமுறையில் வாழ்வைச் சிறையாக்குபவரும் உண்டு.**
- ✡ **நமக்குப் பொருத்தமற்ற discipline கட்டுப்பாடுகளை ஏற்க விரும்பி காலை 4½ மணிக்கு பிரம்மமுகூர்த்தம்என்று பாக்டரி தொழிலாளி வீட்டாரை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தால், நாள் முழுவதும் வேலை செய்ய முடியாமல் சோர்வாக இருக்கும்.**
- ✡ **உள்ளதை உள்ளபடி அனுபவிக்க உள்ளத்தில் உண்மையிருந்தால் போதும்.**
- ✡ **வாழ்வு ஓர் ஆறு. எதிர்நீச்சல் போடவேண்டிய அவசியமில்லாத பொழுது எதிர்நீச்சலில் மூச்சுவாங்குவது மனித இயல்பு.**
- ✡ **அனுபவிப்பது ஆனந்தம்; அதுவே வாழ்வுக்குரிய உண்மை. வாழ்வின் ஆத்மா வெளிப்பட்டால் அனுபவமே ஆனந்தமாகும்.**

❀❀❀

**842. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பரிணாமத்திற்குரிய சிருஷ்டி என்றவொன்றுண்டு; அதுவே நமக்கு அன்னை.**

*அன்னை என்பது அந்நேரத்திற்குரிய சிருஷ்டி.*

அரச குடும்பத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் அரசுக்குரிய வாரிசு ஒருவனிருப்பான். வாரிசு இல்லாமலிருக்க முடியாது. நாட்டுக்குத் தலைவர் உள்ளதுபோல் ஊருக்கும், மாநிலத்திற்கும், மாவட்டத்திற்கும், வட்டத்திற்கும் தலைவர் உண்டு.

**அளவு எதுவானாலும் அந்த அளவுக்குத் தலைமையுண்டு.**

மூளை தலையிலிருக்கிறது. என்றாலும் எல்லாப் பகுதிகளிலும் மூளையின் பிரதிநிதியுண்டு. அது செல்வரைக்கும் உண்டு. அன்னை அதைச் செல்லுலர் மனம் cellular mind என்கிறார். சிருஷ்டி பெரியது என்றாலும் an act செயல் என்பது அதன் அடிக்கல் (unit). அன்னை சிருஷ்டியில் செயல்படுவதுபோல் செயலிலும் செயல்படுகிறார்.

பகல், இரவு என்றுண்டு. ஆபீஸ் பகலில் நடக்கிறது; மற்ற நேரம் மூடியிருக்கிறது. மரமும் தூங்கும் நேரம் உண்டு. ஜவுளிக்கடைக்கு தீபாவளி சீசன்; புத்தகக்கடைக்கு ஜூன் மாதம் சீசன்; மழைக்கு கார்த்திகை சீசன். எதற்கும் பருவம் உண்டு. வக்கீல்தொழிலில் பலர் பிழைத்துக்கொள்வார்கள். சிலர் ஓஹோ என இருப்பார்கள். வருமானமே இல்லாமல் நெடுநாளிருக்கும் வக்கீல்களும் உண்டு. அவர்கட்கும் கடைசி நேரத்தில் 4, 5 வருஷம் அமோகமான வருமானம் வரும். தொழிலில் ஒரு நம்பிக்கை, "எந்த வக்கீலும் ஒரு நேரம் சிறப்பாகச் சம்பாதிப்பான்". விளையாடுபவர்கள் ஒரு நேரம் உற்சாகமாகவும், மற்ற நேரம் ஜீவனற்றும் இருப்பார்கள். ஆனால்,

**எந்தச் செயலுக்கும், எந்த நேரத்திலும் அதற்குரிய சிருஷ்டித்தன்மையுண்டு.**

அன்னையுடன் நேரடியாகத் தொடர்புகொண்டவர்கள், அன்னையின் செயல்களை அவர் விரும்பியபடிச் செய்தவர்கள், அன்னைநினைவு மேலோங்கிய நேரம் செயல்பட்டவர்கள்,



**எல்லா நேரங்களும், எல்லாச் செயல்களிலும் ஜீவனோடு மலர்வதைக் காண்பார்கள்.**

**அன்னையிருந்தால் ஜீவனுண்டு; இல்லாவிட்டால் இல்லை என்பது அனுபவம். செயலைப் புரிந்துகொண்டால், அதன் இரு புறங்களை அறிந்தால், அவை ஜீவனோடு இணைவதைக் காணும்திறன் பெற்றால், அவை இணையும்நேரம் அன்னை வெளிப்படும் நேரம்எனக் காணலாம்.**

✡ *கடைக்கு வருபவர்கள் முகம் மலர்ந்து வரவேற்பவருக்காக வாங்குவதுண்டு.*

✡ *எவர் கடைக்கு வந்தாலும் அவருக்காகவே ஏதாவது வாங்கிப் போவார்கள்.*

✡ *நாம் நமக்காக வாங்குகிறோம் என்றாலும், முகம் மலர்ந்து அழைப்பவருக்காகவும் வாங்குகிறோம்.*

✡ **செயலில் அன்னையைக் காண்பவருக்கு எல்லா நேரங்களும், எந்தச் செயலும், எந்த இடமும் அற்புதமே.**

❀❀❀

*தொடரும்.....*

**ஜீவிய மணி**

**திரும்பத் திரும்பச் சொன்னால் திருப்திப்படும்.**

# ரயில்வே கேட்

V. ரமேஷ் குமார்

*(கதை என்று நான் எழுத நினைத்தாலும் உண்மைச் சம்பவமே, கடைசி நான்கு வரிகளைத் தவிர).*

எப்பொழுதும் மூடியே கிடக்கும் ரங்கராஜபுரம் ரயில்வே கேட். வழக்கம்போல, கூட்டத்தில், காலைநேர நெரிசலில், டென்ஷனுடன் கேட் திறப்பதற்காக நின்றுகொண்டிருந்தேன். வழக்கமாகக் குனிந்து வண்டியைத் தள்ளிச் சென்றுவிடுவேன். கடந்த சில தினங்களாகத் தினம் ஓர் இடிப்பு, தகராறு என்பதால், இன்று பல்லைக் கடித்துக்கொண்டு நின்றிருந்தேன். எல்லாம் ஒரு விளையாட்டால்வந்த வினை. என் நினைவு நான்கு நாட்களுக்குமுன் பறந்தது....

.....மாதக் கடைசி, பைக்கில் இருக்கும் சொச்ச பெட்ரோலில்தான் இன்னும் இரண்டு நாட்கள் சுற்றியாக வேண்டும். வேறு கைமாற்றுக்குக்கூட வழியில்லை. இந்த ஓட்டை பைக் மைலேஜ் வேறு தராது. நாளை வில்லிவாக்கம் போனால் சிறிது பணம் கிடைக்கும். அதுவரை கைகொடுக்குமா..... கவலையுடன் யோசித்தபோது தோன்றியது – ஏதோ, பைப் ஒழுகினால்கூட சமர்ப்பணம், நிறுத்துகிறதாமே – நாளைவரை இந்த பெட்ரோல் வருகிறதா? பார்ப்போம், என்று யோசித்து, “சமர்ப்பணம்” என்று சொன்னேன் – அது இன்னது என்று புரியாமல்.



அன்று முழுதும் சுற்றி, வில்லிவாக்கம் சென்று திரும்பும்போதுதான் மீட்டரைப் பார்த்தேன், 58 கிலோமீட்டர்; திக்கென்றது. இருந்தாலும், சமாதானம் செய்துகொண்டேன். ரிசர்வைச் சரியாக note செய்திருக்க மாட்டேனென்று..... அண்ணா ஆர்ச்சைத் தாண்டி, அமைந்தகரைவரை செல்ல அடிவயிறு கலங்கியது; பயபந்து என்றால் என்ன என்பது அப்போதுதான் புரிந்தது. என்னதான் தவறாகக் கணக்குப் போட்டாலும் அரை லிட்டருக்கு எழுபது கி.மீ. வருமா? கலங்கிப்போய் சொன்னேன், “மன்னித்துவிடுங்கள், மதர்!” சரியாக, ஒரு பெட்ரோல் பங்க் அருகில் போய் நிற்க, எதிரிலிருந்த சுமோவில் மதரின் சிரிப்பு!

ஒரே குஷி.... இனி என்ன வேண்டும்.... உலகின் மகாசக்தி என்னைக் கவனித்துவிட்டது. அதற்கு என்ன செய்யவேண்டும் என்றும் தெரிந்துவிட்டது.... என்ன கேட்கலாம்.... நிறைய பணம்?.... எதிரிகளை பழிதீர்க்கச் சொல்லலாமா?.... பிரிந்த குடும்பத்தைச் சேர்க்கச் சொல்லலாமா?..... இரு, இரு. நன்றாக யோசித்து கேட்கலாம் – மனது சொல்லியது.

வீட்டிற்கு வந்து இரவு சாப்பிட உட்கார்ந்தேன். ஒரே ஈசல் தொல்லை. மனது கூப்பாடு போட்டது. இன்னும் ஒரே ஒரு டெஸ்ட் ப்ளீஸ்.... உற்சாகத்தில் சொன்னேன். “நீங்கள் இப்படிச் செய்தால், நான் எப்படிச் சாப்பிடுவது, மதர்! சொன்னால்தான் கேட்பீர்களா?”..... ஒரு க்ஷணம்தான். நெடுஞ்சாண்கிடையாக மதர் படத்தின்முன் விழுந்தேன்! காரணம் லைட்டில் இருந்த ஈசல் மட்டுமல்ல, கீழே செத்துப்போனதுபோன்று கிடந்தவைகளும் பறந்ததுதான்.

ஐயோ! இனி கேள்வியே இல்லை. இனி உங்களுக்காகவே வாழ்வேன். நீங்கள் உபயோகித்த வார்த்தை மட்டுமன்று, அதன் மொழிபெயர்ப்புகூட மந்திரம் ஆகிவிட்டதே! அப்படியே உங்கள் வார்த்தைகளையே உபயோகிக்கிறேன். “என்னை உங்கள் இலட்சிய குழந்தையாக மாற்றிவிடுங்கள்”.

மறுநாள் தூங்கி எழுந்தபோதுதான் பயம் வந்தது. ஏதோ ஒரு emotionஇல் சொல்லிவிட்டோம். நிஜமாகவே அன்னை நம்மை தேர்ந்தெடுத்துவிட்டால்..... வேண்டாம்பா!....

கேட் தூக்க, நினைவு கலைந்தது. இன்றும் ஒருவன் இடிக்க, சென்னை பாஷையின் அத்தனை வார்த்தைகளும் நுனி நாக்கில் வர, பல்லைக் கடித்துக்கொண்டேன். தெரிந்துவிட்டது. அன்னை தம் testஐ ஆரம்பித்துவிட்டார்கள்!..... இல்லை அன்னையே! இன்றுமுதல் என்ன பிரச்சினை வந்தாலும் சண்டை போடமாட்டேன், மற்றவர்களின் அவசரமும், நிலவரமும் புரிகிறது. இதுவே ஓர் ஆரம்பமாக, Token Actஆக வைத்துக்கொள்கிறேன், உதவுங்கள் என்றேன். “மன்னிச்சுக்கோப்பா” என்றேன் இடித்தவரிடம்.

மறுநாள்....

இன்றும் விரதத்தை காப்பாற்றவேண்டுமேஎன்ற எண்ணத்துடன் கேட்டை நோக்கிச்செல்ல.... கேட் மூடவில்லை.... சீராக வாகனங்கள் சென்றுகொண்டுஇருக்க.... ஆச்சரியம் தாங்காமல் விசாரித்தேன். ‘‘இன்றுமுதல் இந்த trackஇல் meterguage ரயில்கள் கிடையாது. Broadguage மட்டும்தான் என்பதால் frequency குறைந்துவிட்டது. இனி அடிக்கடி மூடப்படாது”, குறிப்பாக நான் செல்லும் நேரத்தில்..... அதன்பிறகு பேசியது எதுவும் என் காதில் விழவில்லை. “**நீ பொய் சொல்லக்கூடாது என்று முடிவு செய்தால், அதற்கான சந்தர்ப்பத்தையே நான் தரமாட்டேன்**” என்ற வார்த்தைகள்தான் கேட்டது. இதுதான் Life responseஓ......

கண்ணை மறைக்கும் கண்ணீருடன் வானம் பார்த்தேன்..... மேகமூட்டம்..... **அருளாக!........ அன்னையாக!.....**

❀❀❀





# பிரச்சினை வாய்ப்பாக மாறும்

N. அசோகன்

அன்னையின் அருட்சக்தி சத்தியஜீவிய சக்தியைத் தாங்கிவருவதால் விசேஷ சக்திகொண்டு செயல்படுகிறது. இவ்விசேஷ சக்தியின் காரணமாக நம்மை நாடிவரும் பிரச்சினைகளை அன்னையின்அருள் நன்மை தரக்கூடிய வாய்ப்புகளாக மாற்றித்தரவல்லது. சாதாரணமாக வாழ்க்கையில் சிரமமோ அல்லது ஆபத்தோ வந்துவிட்டால் அவற்றிலிருந்து விடுபடுவதே கடினம். ஏதோ ஒரு சமயம் அரிபொருளாக பிரச்சினையாக வந்தது வாய்ப்பாக மாறுவதுண்டு. ஆனால் அன்னை அன்பர்களுக்கு இது மிகவும் சகஜமாக நடக்கிறது.

சுமார் 25 வருடங்களுக்கு முன்பு ஒரு தொழிலதிபர் தொழில்ரீதியாக இருந்த சட்டங்களை மீறினார். இதன் விளைவாக அவருக்கு அரெஸ்ட் வாரண்ட் வந்தது. அப்பொழுதிருந்த அரசியல் சூழ்நிலையில் அவருக்கிருந்த அரசியல் செல்வாக்கு கைகொடுக்கவில்லை. தொழிலதிபருக்கு வந்திருந்த ஆபத்திலிருந்து தப்பிக்க முடியும்என்ற நம்பிக்கை குறையத் தொடங்கியது. ஆனால் தொழிலதிபரின் பார்ட்னர் அன்னை அன்பராக இருந்தார். அவர் தொழிலதிபரிடம், “இனிமேல் இத்தகைய தவறுகளைச் செய்யவேமாட்டேன் என்று அன்னையிடம் உறுதியளித்தால் அன்னை உங்களைக் காப்பாற்றுவார். உங்களால் அந்த உறுதியை அளிக்க முடியுமா?” என்று கேட்டார். தொழிலதிபரும் சம்மதித்து அத்தகைய உறுதியை எடுத்துக்கொண்டு, அதை அமுல்படுத்த பெருமுயற்சி எடுத்தார். அன்பரும் தொழிலதிபருக்காக அன்னையிடம்

தீவிரமாகப் பிரார்த்தனை செய்தார். தொழிலதிபர் வெளிப்படுத்திய சின்சியரிட்டியின் காரணமாக வந்த பேராபத்து விலகி பெரிய வாய்ப்பாக மாறி, தொழிலதிபரை மேலும் பலமடங்கு உயர்த்தியது.

திருவுருமாற்றம் என்றால் என்ன? நம் கண்ணிற்குக் கெடுதலாகத் தெரிவதை நாம் கெட்டது என்கிறோம். ஆனால் ஆன்மீகத்தின் கண்ணோட்டமே வேறு. உயர்ந்த நல்லது ஊனக்கண்ணிற்குக் கெட்டதாகத் தெரிகிறது. நாம் வெண்மையை ஒளிமயமானது எனவும், கறுப்பை இருட்டு எனவும் சொல்கிறோம். ஒரு பொருளின்மேல் விழுகின்ற ஒளியெல்லாம் பிரதிபலிக்கப்படும்பொழுது அப்பொருள் வெண்மையாகத் தெரிகிறது. அதே சமயத்தில் இன்னொரு பொருளின்மேல் விழும் ஒளியையெல்லாம் அப்பொருள் வாங்கிக்கொள்ளும்பொழுது அது கறுப்பாகத் தெரிகிறது. அதாவது விஞ்ஞானரீதியாகப் பார்த்தால் வெண்மையாகத் தெரியும் பொருள் ஒளியற்றதாகவும், கறுமையாகத் தெரியும் பொருள் ஒளி நிறைந்ததாகவும் இருக்கிறது என்பதுதான் உண்மை.

ஆன்மீகம் இந்த ஆழ்ந்த உண்மையை ஏற்றுக்கொள்ளும். ஆனால் நம்முடைய சாதாரணஅறிவு இதை ஏற்றுக்கொள்ளாது. நாம் ஏற்றுக்கொள்கிறோமோ இல்லையோ, வாழ்க்கையில் இவ்வுண்மையை நிலைநாட்டும்படியான நிகழ்ச்சிகள் நடக்கத்தான் செய்கின்றன. அதாவது பிரச்சினைக்குப் பின்னால் அதிர்ஷ்டம் மறைந்துள்ளது என்ற ஆழ்ந்த உண்மையை வாழ்க்கைச் சம்பவங்களும் நிலைநாட்டுகின்றன.

சுமார் 40 வருடங்களுக்குமுன்பு அகில இந்திய ஸ்தாபனமொன்றில் உயர்மட்ட அதிகாரிகள் 12 பேரிருந்தனர். அவருளொருவர் ஓய்வு பெற்றபொழுது, 13ஆம் நிலையிலிருந்தவரை அந்த உயர்மட்டக் குழுவில் ஒருவராக உயர்த்தினர். புதிதாகப் பதவி உயர்வு பெற்றவர் அன்னை அன்பராகவும், நேர்மையானவராகவும் விளங்கினார். ஊழலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மற்ற பதினொரு பேருக்கும் இவருடைய நேர்மை



இடையூறாக இருந்தது. மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு இந்த பதினொருவரும் சேர்ந்து பன்னிரண்டாமவரைப் பற்றி ஊழல் புகார் அனுப்பி நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொண்டனர்.

அவர் CBI துறைக்குப் புகாரை அனுப்பி விசாரிக்கும்படி உத்தரவிட்டார். விசாரணையின் இறுதியில் 'புகாருக்கு ஆளானவர் மட்டும்தான் நேர்மையானவர்; மற்றவர்களெல்லாம் ஊழல் பேர்வழிகள்' என்று CBI report கொடுத்தது. அதன் பின்னர்தான் மொரார்ஜி அவர்களுக்கு உண்மை புரிந்தது. அச்சமயம்பார்த்து ஸ்தாபனச் சேர்மன் ஓய்வுபெற்றார். மொரார்ஜி புதியவரைச் சேர்மனாக்கினார்.

வந்தது ஆபத்து. ஆனால் இறுதியில் கிடைத்தது உச்சக்கட்டப் பதவி உயர்வு. இதற்குக் காரணம் அவர் வாழ்க்கையில் அந்நேரம் அன்னையின் அருள் செயல்பட்டதுதான். வந்தது பொய்யான ஒரு புகார். ஆனால் அன்னையின் சத்தியஜீவிய சக்தி அந்தப் பொய்யை விலக்கி, அதற்குப்பின்னால் மறைந்திருந்த ஒரு பெரிய உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து அன்பருக்குப் பெரிய பதவி உயர்வை வாங்கிக்கொடுத்தது. ஆகவே அன்னை அன்பர்களைப் பொருத்தவரை பிரச்சினை என்பது தலைகீழான வாய்ப்பு என்பதுதானுண்மை.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நல்லவனாக இருப்பது அகந்தையற்ற நிலை.

நல்லவன்என பெயரெடுக்க விரும்புவது அகந்தை.

***நல்லவனுக்கு அகந்தையில்லை.***

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184) Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.125 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |
| 8. | Spiritual Opulence | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | ஐம்பது இலட்சம் | சமர்ப்பணன் | ரூ. 50 |
| 9. | $ 100,000 | William Learner | ரூ. 50 |

*தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.*

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# சூட்சுமச் சூழல்

குடும்ப வக்கீலைப் பார்த்து 12 ஆண்டுகளாயின. ஒரு சிறு விஷயமாக அவரை ஒருவர் சந்தித்தார். இரண்டு நாள் கழித்து அவர் அண்ணன், “நான் வக்கீலைப் பார்த்து நெடுநாளாகிறது. நேற்றுக் கனவில் வந்தார்” எனத் தம்பியிடம் கூறினார். தம்பி தாம் வக்கீலைப் பார்த்துவந்ததைக் **கூறவே தொடர்பு அண்ணனுக்குப் புரிந்தது. தம்பி நேரடியாகப் பார்த்தவர், அண்ணன் கனவில் சூட்சுமமாக வந்திருக்கிறார்**. ஓர் அன்பர் தம் வீட்டு அறையொன்றில் நுழைந்தபொழுது நாற்காலியில் அன்னையின் உருவம் சிறியதாகத் தெரிந்தது. சாஷ்ட்டாங்கமாக நமஸ்காரம் செய்து, யோசனையை மேற்கொண்டு, பகவான் புத்தகங்கள் 10 அந்த நாற்காலியில் 1 வாரமிருந்தது, சூட்சுமமாக அன்னை உருவமாக அவருக்குத் தெரிந்துள்ளது. போட்டோவில் அன்னை அசைவதும், கனவில் அன்னை வருவதும் பலரும் அறிந்தது.

- **தகப்பனார் அன்னை பக்தர். மகன் நமஸ்காரம் செய்யும்பொழுது தகப்பனார்கால் அன்னைபாதமாகத் தெரிந்தது.**
- **அன்னைபடம் உள்ள இடங்களில் ஊதுவத்தி கொளுத்தா விட்டாலும், ஊதுவத்தி மணம் எழும்.**

பக்தர்கள் வீட்டில் அன்னைச் சூழலில் எப்பொழுதும் இருக்கிறார். நாம் பாராமுகமாக இருக்கிறோம். மனத்தை 1 வாரம் அல்லது 1 மாத காலத்திற்கு மெதுவாகத் தயார் செய்துகொள்ள முடிந்தால், அவர்கட்கு ஒரு யோசனை சொல்லலாம். இடைவிடாத நினைவுக்கு ½ மணி, ஒரு மணி எனத் தயார் செய்து 1 நாள், 24 மணி நேரம் இடைவிடாமல் அன்னையை ஒருவரால் நினைக்க முடியுமானால், அவருக்கு வீட்டில் அன்னையிருப்பது தெரியும். அந்த ஒரு நாளில்,

- **பகவான் புத்தகத்தைப் பிரித்தால் பகவான் உருவம் தெரியும்.**
- **அன்னைபடம், புத்தகம், பிளஸிங்பாக்கட் உள்ள இடங்களில் வெள்ளொளி அல்லது திருவுருவம் தெரியும்.**
- **நாம் எடுக்கப்போகும் பொருள்கள்மீது அன்னையின்கை தெரியும்.**
- **அதேபோல் கண், மூக்குநுனி, பாதம் பல இடங்களில் தெரியும்.**

அந்த ஒரு நாளில் அன்னை நம் வீட்டில் சுத்தம் அதிகமாக உள்ள இடங்களிலெல்லாம் இருப்பதைக் காட்டுவார். அது அன்னை தரிசனம் நிதர்சனம்என நிரூபிக்கும். யாரிடம் பேசினாலும் அவர்கள் புருவ மத்தியில், நெஞ்சில் அன்னையின்உருவமோ, ஒளியோ தெரியும்.

❀❀❀

# வேலையில்லாத இளைஞர்கள்

இன்ஜினீயரிங் டிப்ளமா பெற்ற இரு இளைஞர்கள் திருச்சியிலிருந்து வேலை தேடி சென்னைக்கு, தியான மையத்திற்கு வந்தார்கள். **வேலை கேட்டால், அன்னை வேலை தருவார்கள் என்பது மையம் கொடுத்த செய்தி. அவர்களுக்கு நம்பிக்கை பிறந்தது.** தினமும் மையம் வந்து பிரார்த்தனை செய்தனர். மூன்றாம் நாள் ஒருவருக்கு மூன்று மாத வேலை கிடைத்தது. முதல் மாதம், சற்று சம்பளம் அதிகமாக வேறொரு கம்பனியில் கிடைத்தது. அடுத்த மாதம் நல்ல சம்பளத்தில் பெங்களூரில் நல்ல வேலை கிடைத்தது. அடுத்தவருக்கு வேலை கிடைக்க 3 மாதங்களாயின. கிடைத்தவுடன் அவரை டென்மார்க்குக்கு, பயிற்சிக்காக அனுப்பச் சிபாரிசு செய்தனர். ‘‘புதியதாய் வந்த என்னை வெளிநாட்டுப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்துவிட்டனர். நான் பயிற்சி முடிந்து என் seniorரிடம் வந்து வேலை செய்ய வேண்டுமே” என அவர் மனம் கலங்கியுள்ள நேரம், அவருடைய seniorஐ டென்மார்க்கிற்கே இவருக்கு மேலதிகாரியாகப் பயிற்சிக்கு அனுப்ப முடிவு செய்தனர்.

- **வேலையில்லை என்பது படித்த இளைஞர்கட்கு சிம்மசொப்பனம்.**
- **வாழ்வில் சிம்மசொப்பனம், சித்ரவதை வருவதுண்டு.**
- **அவை வரக்கூடாது, வந்தால் தப்பிப்பது அரிது.**
- **அன்னையை அறிந்தோர்க்கு சிம்மசொப்பனமில்லை; இருந்தால் அது வாய்ப்பாக மாறும்.**
- **உடனே வேலை கிடைப்பது பொது.**
- **நாள் தள்ளியும் கிடைக்கும்.**
- **எவ்வளவு தாமதமாகிறதோ, அவ்வளவு பெரியது வரும்.**

**தாமதிக்காது; தாமதித்தால் தகுதிக்கு மீறியது வருவதால் தாமதமாகிறது என்பது தத்துவம்.**

❀❀❀